Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 06 (27.04.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :208

# கருணா குழுவினருக்கு இராணுவம் ஆதரவு விடுதலைப் புலிகள் கடுமையாக எச்சரிக்கை

(கிளிநொச்சி)

கருணாவின் குழுவைச் சேர்ந்தவர்களுக்கு இலங்கை இராணுவம் ஆதரவு வழங்குவது - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்பாட்டை சுமுகநிலையில் இருந்து விலத்திச் செல்லும் என்று இலங்கை அரசாங்கத்தை விடுதலைப் புலிகள் வன்மையாக எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுத்லைப் புலிகளின் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பில் ஏழு தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் கருணாவின் தேசவிரோத குழுவினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மட்டக்களப்பு ஆயித்தியமலை பகுதியில் இடம்பெற்றது.

வவுணதீவு இராணுவ சோதனை நிலையத்தின் ஊடாக வந்த தேசவிரோதி கருணாவின் குழுவினரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நம்புகின்றனர்.

இக்கொலைச் சம்பவத்தின் பின்னர் தேச விரோதக் குழுவினர் இராணுவ சோதனை நிலையத்தின் ஊடாகவே திரும்பியும் சென்றுள்ளனர்.

எனவே இராணுவத்துக்குத் தெரியாமல் தேசவிரோதி கருணாவின் ஆதரவாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திவிட்டு வெளியேறுவது சாத்தியமில்லை என விடுதலைப் புலிகள் கருதுகின்றனர்.

கருணாவின் குழுவினருக்கு இராணுவம் ஆதரவு வழங்குவது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான போர்நிறுத்த உடன்பாட்டை சுமுகநிலையில் இருந்து விலத்திச் செல்லும் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாக எச்சரிக்கின்றனர்.

இந்த விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இது குறித்த விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தம்மிடம் தெரிவித்துள்ளதாகவும் கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## மட்டக்களப்பு - வவுணதீவு

# இராணுவ முகாம் ஊடாகச் சென்ற குழு

# ஏழு போராளிகளைச் சுட்டுக் கொன்றது!

## இராணுவத்தரப்பு ஒத்துழைத்ததாக குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - வவுணதீவு இராணுவ முகாம் ஊடாக வெள்ளை நிற ஹையேஸ் வாகனமொன்றில் வந்த குழுவினர், இருவேறு இடங்களில் நடத்திய தாக்குதலில் ஏழு விடுதலைப் புலிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.**

**இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -**

மட்டக்களப்பு - ஆயித்தியமலை பிரதான வீதியில், வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து 8 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பிரதேசத்துக்குள் வெள்ளை வான் ஒன்றில் ஊடுருவிய குழுவினரே இத்தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒன்று வீசப்பட்டபோது அது வெடிக்காததால் சேதங்கள் ஏற்படவில்லை. இந்தக் கிரனேட் நேற்றுக்காலை மீட்கப்பட்டது.

## வவுணதீவுச் சம்பவம் குறித்து புலிகளிடமிருந்து புகார் வந்தது!

### போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

வவுணதீவுப் பகுதியில் ஏழு விடுதலைப் புலிஉறுப்பினர்கள் நேற்று முன்தினமிரவு சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான புகார் ஒன்றை கிளிநொச்சியிலிருந்து புலிகளின் அரசியற்துறைப்

தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு விமான நிலையத்துக்கு மேற்கே - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தக் கொலைகளை கருணாவின் ஆட்கள்தான் செய்தார்கள்

...தெரியவருவதாவது -

மட்டக்களப்பு - ஆயித்திய மலை பிரதான வீதியில், வவுண தீவு இராணுவ முகாமிலிருந்து 8 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள முள்ளாமுனை என்ற இடத்திலிருந்த புலிகளின் வேளாண்மை பண்ணை மீது முதலாவது தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வவுணதீவு முகாம் ஊடாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வெள்ளை வான் ஒன்றில் ஊடுருவிய குழுவினரே இத்தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முள்ளாமுனை வேளாண்மைப் பண்ணை முகாமில் தங்கியிருந்த உடல் ஊனமுற்ற நான்கு விடுதலைப் புலி உறுப்பினர்கள் இந்தத் தாக்குதலின்போது கொல்லப்பட்டனர்.

இந்த முகாமில் காவலுக்கு இருந்த இருவர் மீது கிரனேட் ஒன்று வீசப்பட்டபோது அது வெடிக்காததால் சேதங்கள் ஏற்படவில்லை. இந்தக் கிரனேட் நேற்றுக்காலை மீட்கப்பட்டது.

கால்களை இழந்த நிலையில் அங்கிருந்த கப்டன் சிசில்குமார் மற்றும் வாமகாந்த், இரண்டு கண்களையும் இழந்த நிலையில் அங்கு சிகிச்சை பெற்றுவந்த லெப். வினோதன், ஒரு காலை இழந்த நிலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிஉறுப்பினர்கள் நேற்று முன்தினமிரவு சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான புகார் ஒன்றை கிளிநொச்சியிலிருந்து புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தம்மிடம் நேற்று நண்பகலுக்கு முன்னர் தெரிவித்ததாக - போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் துக்கு மேற்கே - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தக் கொலைகளை கருணாவின் ஆட்கள்தான் செய்தார்கள் என்று தமிழ்ச்செல்வன் எமக்கு அறிவித்தார்.

ஆனால், இந்த முறைப்பாடு குறித்து நாம் விசாரித்து வருகின்றோம். தற்போதைய நிலவரங்களின் படி எமக்கு பெரிதாகத் தக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இரு வேறு விபத்துக்களில் வடமராட்சியில் இருவர் பலி!

(பருத்தித்துறை)

வடமராட்சியில் நேற்றுக்காலை இடம்பெற்ற இருவேறு வாகன விபத்துச் சம்பவங்களில் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

முதலாவது விபத்துச் சம்பவம்- பருத்தித்துறை - ஓடக்கரையில் நேற்றுக்காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

திருமண வீடொன்றுக்குச் சென்று கொண்டிருந்த ஹைஏயேஸ் வான் ஒன்றின் யன்னலூடாக தலையை நீட்டிப் பார்த்துக்கொண்டிருந்த சிறுமி ஒருவர் மின்கம்பத்தில் தலை மோதியதில் அந்த இடத்திலேயே மரணமானார்.

குறிப்பிட்ட ஹைஏயேஸ் வான் திருப்பமொன்றில் திரும்பிக்கொண்டிருந்தபோதே இந்தப் பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

பலாலியைச் சொந்த இடமாகவும், பருத்தித்துறை - நெருஞ்சி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வென்ஸ் யூல்டா என்ற 13 வயதுச் சிறுமியே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ முகாமூடாக வந்தவர்களே படுகொலைகளைச் செய்துள்ளனர்!

## மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்

வவுணதீவு இராணுவ முகாமூடாக வந்தவர்கள் தான் இந்தப் படுகொலைகளை செய்தார்கள். நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆயித்திமலையில் ஏழு விடுதலைப் புலிகள் கொலையுண்ட சம்பவம் பற்றி பி.பி.சிக்குத் தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது சம்பந்தமாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டிருக்கின்றோம். இராணுவத்தோடு இணைந்து செயற்படுகின்ற சக்திகள்தான் இதைச் செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம். இப்படியான சம்பவம் முதற் தடவையாக இடம்பெற்றுள்ளது.

கருணா தொடர்பாக நாங்கள் எந்தக் கருத்தும் கூறவில்லை. அவர்கள் இந்தப் பிரதேசத்தில் இல்லை. அவர் இங்கு இல்லை என்ற தகவல்தான் உள்ளது.

அவர் இங்கிருந்து ஓடிச்சென்றுவிட்டார் என்றுதான் இருக்கிறோம். இந்தக் கொலைகளைச் செய்துவிட்டு இராணுவச் சோதனைச் சாவடிமூலம் சென்றிருக்கின்றார்கள். இவர்கள் இராணுவத்தின் ஆதரவுடன் செயற்படுகிறார்கள் என்று நம்பவேண்டியுள்ளது.

இது நிச்சயமாக போர்நிறுத்தத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவமல்ல. இது சம்பந்தமாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# வடமராட்சி கிழக்கிற்கு ஜூன் முதல் மின்சாரம்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு எதிர்வரும் யூன் மாதம் முதல் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக இலங்கை மின்சாரசபையினர் தெரிவித்தனர்.

'கப்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் இவ்வேலைத்திட்டத்திற்கு பல மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக வடமராட்சி கிழக்கின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த மணற்காடு, அம்பன், குடத்தனை வடக்கு, பொற்பதி, குடத்தனை ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

மின்விநியோகப் பணிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் மின்சார சபை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். (122)

# ஹையேஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வீதியில் மோட்டார் சைக்கிளும், ஹையேஸ் வாகனமும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மானிப்பாய் வீதி ஆனைக் கோட்டைச் சந்திக்கு அண்மையாக இடம்பெற்றது. இச்சம்பவத்தின் போது, ஆஸ்பத்திரி வீதியில் வசிக்கும் லோகேஸ்வரன் (வயது 45) என்பவரே காயமடைந்த வராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - மானிப்பாயில் இருந்து வந்த ஹையேஸ் ரக வாகனமும் மானிப்பாய் நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்ட போதே இந்த விபத்து இடம்பெற்றது. (தீ)

# கூட்டுறவாளர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கான மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் - அனைத்துக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்களையும், முகாமையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

இந்தக் கருத்தரங்கில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு மனித உரிமைகள் குறித்த கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் இன்று காலை 11 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் என்.பேரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது.

# மோசமான முதல்வர்களில் ஜெயலலிதா முதலிடத்தில்!

## கருத்துக் கணிப்பு தெரிவிப்பு

இந்தியாவின் பல்வேறு மாநில முதலமைச்சர்களின் செயற்பாடுகள் குறித்து 'இந்தியா ருடே' இதழ் நடத்திய இரண்டாவது கருத்துக் கணிப்பிலும் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா மீண்டும் கடைசி இடத்தைப் பிடித்து நாட்டிலேயே மிக மோசமான முதலமைச்சர் எனற பெருமையைத் தக்கவைத்துள்ளார்.

இந்தியா ருடேயும், சர்வதேச கருத்துக் கணிப்பு அமைப்பான ஓ. ஆர்.ஜி - மார்க் ஆகியவையும் இணைந்து முன்னர் மக்கள் மத்தியில் நடத்திய முதலாவது ஆய்விலும் ஜெயலலிதாவே இந்தியாவில் மிகமோசமான முதல்வர் என்ற பெயரைப் பெற்றிருந்தார்.

தமிழக மக்களும் அவருக்கு அனைததுத் துறைகளிலும் மிகக் குறைந்த புள்ளிகளையே வழங்கியிருந்தனர்.

இந்தநிலையில், நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலையொட்டி மீண்டும் அதேபோன்ற ஆய்வை இந்தியா ருடே நடத்தியது. இதிலும் தமிழக மக்கள் மற்றும் பிற மாநில மக்கள் ஜெயலலிதா மிகமோசமான முதல்வர் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் சிறந்த முதல்வராக டெல்கி முதல்வர் ஷீலா தீட்சித் மீண்டும் தெரிவாகியுள்ளார்.

அடக்குமுறை, பொலிஸ் ராஜ்ஜியம் நடத்துவது, அரசியல் பழிவாங்கல் ஆகியவையே ஜெயலலிதா மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியுள்ளதாக இந்தியா ருடே தெரிவித்துள்ளது.


## இலங்கை வங்கி அறிவித்தல்

- 30.04.2004 - வெள்ளிக்கிழமை - அரைநாள் விடுமுறை வங்கி அலுவல்களுக்காக காலை 9.00 - 10.00 மணி வரை திறந்திருக்கும்.
- 07.05.2004 - வெள்ளிக்கிழமை - விசேட விடுமுறை தினம்

மேற்குறிப்பிட்ட அறிவித்தல்களை எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உதவிப் பொது முகாமையாளர் -
வடபிராந்தியம்
இலங்கை வங்கி,
உதவிப் பொது முகாமையாளர்
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-2478)


# தேசியத் தலைமையின் கரத்தில் தமிழ்மக்கள் வழங்கிய அரசியற்பலம் எமது போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி

## பேராசிரியர் கோபால கிருஷ்ணஐயர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியத்தின் தலைமையின் கரத்திலே பேரம் பேசக்கூடிய பலமான அரசியற்பலம் உருவாகியுள்ளமை தமிழர் விடுதலைப் போராட்டத்திற்குக் கிடைக்கப்பெற்ற மாபெரும் வெற்றியாகுமென யாழ். பல்கலைக்கழக . கலைப்பீடாதிபதியும், பதில் துணைவேந்தருமான பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று இடம்பெற்ற தந்தை செல்வாவின் 24 ஆவது சிரார்த்த தினத்தில் கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றும் போது தெரிவித்ததாவது -

ஒரு கால கட்டத்தில் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் செல்ல முடியாமல், இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினை எனக் கூறப்பட்ட ஈழத்தமிழர் பிரச்சினை இன்று சர்வதேச அரங்கு வரை எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

தமிழ் மக்களது பிரச்சினை சமாதான வழியிலேயே தீர்க்கப்பட வேண்டும் எனச் சர்வதேசம் வலியுறுத்தும் ஒரு நிலைப்பாடு ஈழத் தமிழர் போராட்டத்தின் மூலம் ஏற்பட்டுள்ளது.

அதற்கு அப்பாலும் எம்மீது திணிக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் தமிழ்த்தேசியத்திற்கு நல்லதொரு உறுதிப்பாட்டைப் பெற்றுத் தந்துள்ளது. தமிழ்த்தேசியத்திற்கு ஒரு வலுவான ஆணையை மக்கள் வழங்கியுள்ளதன் மூலம் சமாதானப் பேச்சுக்களின் போது தீர்க்கமான தமிழர்களது சுயநிர்ணய உரிமையுடன்கூடிய ஒரு தீர்வை எட்டக் கூடிய சந்தர்ப்பத்தை இந்தத் தேர்தல் ஏற்படுத்தியுள்ளது.

1977 ஆம் ஆண்டு தந்தை அமரரானார். அதே ஆண்டு இடம்பெற்ற தேர்தலிலே வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை வைத்துப் போட்டியிட்ட தமிழரசுக் கட்சி மாபெரும் வெற்றியினைப் பெற்றது.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் தமிழர்களது சுயநிர்ணய உரிமை பற்றியும், எமது இறைமையைப் பயன்படுத்தி தமிழரசு ஒன்றை அமைப்பதே தமிழினத்தின் இலட்சியம் என முன்மொழிந்தது.

இந்த இலட்சியத்தை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பத்தை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்தார்.



தந்தை செல்வாவின் 24 ஆவது சிரார்த்த தினத்தில் கலந்துகொண்ட பேராசிரியர்.ஜெபநேசன் அடிகளார், பேராரிசியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட மற்றும் பல உறுப்பினர்களைக் காணலாம்.



தந்தை செல்வாவின் 24 ஆவது சிரார்த்த தினத்தில் தமிழ்த்தேசியத்தைக் கட்டி வளர்த்த மூதறிஞரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ம.க.ஈழவேந்தனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம்.

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் மே தினத்தினைச் சிறப்பாக நடாத்துவது குறித்து ஆராயும் கூட்டம் நாளை பி.ப. 3 மணிக்கு யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து தொழிற்சங்கங்கப் பிரதிநிதிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மே தின ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

## விசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம்

(சுதுமலை)

நாட்டில் நடைபெற்ற போர் காரணமாக இடம்பெயர்ந்து மாகியப்பிட்டியில் இயங்கிவரும் கீரிமலை கமநல சேவை கேந்திர நிலையத்தின் சீடா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில், ரொபின் ரக நீர் இறைக்கும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய விரும்பும் ஓர் விவசாயி ஆரம்பத் தொகையாக 10 ஆயிரம் ரூபா செலுத்தி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதுடன், மிகுதிப் பணத்தை தவணை முறையில் செலுத்த முடியும்.

இதேபோல் - வில்லியஸ் ரக நீர் இறைக்கும் இயந்திரத்தை கொள்வனவு செய்ய விரும்புபவர் உடனடியாக 6 ஆயிரம் ரூபாவினைச் செலுத்தி மீதிப்பணத்தினை தவணை முறையில் செலுத்த முடியும்.

# புயலில் சிக்கியதால் அத்வானி சென்ற ஹெலிகொப்ரர் அவசரமாகத் தரை இறங்கியது!

தேர்தல் பிரசார சுற்றுப்பயணத்தில் இந்திய துணைப்பிரதமர் அத்வானி சென்ற ஹெலிகொப்டர் புயல் காற்றில் சிக்கி நடுவானத்தில் தடுமாறியது. ஹெலிகொப்டர் அவசர அவசரமாகத் தரையிறக்கப்பட்டதால் அத்வானி காயமின்றி உயிர் தப்பினார்.

துணைப்பிரதமர் அத்வானி நேற்று முன்தினம் பீஹார் மாநிலத்தில் தேர்தல் பிரசாரத்துக்கு சென்ற ார். அவர் பகல்பூர் என்ற இடத்தில் பிரசா ரத்தை முடித்துக் கொண்டு ஹெலி கொப்டரில் பாட்னா விமான நிலை யத்துக்கு புறப்பட்டார். அத்வானி யுடன் பீஹார் மாநில பாரதீய ஜனதா தலைவர் கோபால் நாராயண் சிங் கும் அதில் பயணம் செய்து கொண் டிருந்தவேளை, ஹெலிகொப்டர் நடுவானத்தில் பறந்து கொண்டு இருந்தபோது திடீரென பயங்கர வேகத்துடன் புயல்காற்று வீசியது.

அதில் ஹெலிகொப்டர் சிக்கிக் கொண்டு தடுமாறியது. இதனால் அத்வானி உட்பட ஹெலிகொப்டரில் இருந்த அனைவரும் அதிர்ச்சியடைந்தனர்.

அப்போது ஹெலிகொப்டர் பாட்னாவில் இருந்து 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஜெத்லி என்ற கிராமத்தின் மீது பறந்து கொண்டிருந்தது.

புயல் காற்றின் வேகம் அதிகமாக இருந்ததால் தொடர்ந்து பறப்பது ஆபத்து என்று விமானி முடிவு செய்தார். அகில இந்திய வானொலி நிலையத்தின் மைதானத்தில் மெதுவாக ஹெலிகொப்டரை தரை இறக்கினார்.

அத்வானியின் ஹெலிகொப்டர் நடுவழியில் இறங்கியது பற்றி பாட்னாவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனே பாட்னாவில் இருந்து ஜெத்லி கிராமத்துக்கு கார்கள் அனுப்பப்பட்டன. கார்மூலம் அத்வானி பாட்னா சென்றார். அங்கிருந்து தனி விமானம் மூலம் அவர்


நிறஞ்சனாஸ் சங்கானை
விக்ரம், சூர்யா, லைலா நடித்த
பிதாமகன்
(சி-2386)
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
Do not Disturp

ராஜா யாழ்ப்பாணம்.
இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த
கில்லி

காட்சி நேரம் : 10.30,2.30,6.30, 9.30 (பு.நே)
(சி-2387)

# ஹெல உறுமயவுடன் சேர்வதை விடுத்து கட்சியை வளர்க்க உழைக்கவேண்டும்!

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - ஜாதிக் ஹெல உறுமயவுடன் கூட்டுச் சேர்வதைவிடுத்து, கட்சியின் எதிர்கால வளர்ச்சி பற்றிச் சிந்திக்கவேண்டும் என வர்த்தக தொழில்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

அவர் தனது அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர்கள் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியானது சிறுபான்மைக் கட்சிகளையும், அவர்களது விருப்பங்களையும் உணர்ந்து, மதிப்பளித்துச் செயற்படவேண்டும். அப்போதுதான் ஆட்சி நிலைத்திருக்க முடியும்.

நான் எனது பதவியையும் மற்றும் சொத்துக்களையும் தியா கம் செய்யத் தயாராகவுள்ளேன். ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி, ஜாதிக ஹெல உறுமய கட்சியுடனுள்ள தொடர்பை நிறுத் திக் கொள்ளவேண்டும். அதற் குப் பதிலாக தமிழ் - முஸ்லிம் கட்சிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பௌத்தமத குருமார்களின் செயல்கள் ஆச்சரியத்தைத் தருவதாக உள்ளது. அதுவும் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்தமை மிகவும் ஆச்சரியத்தைத் தருகிறது.

இதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சரியான நடவ டிக்கை எடுக்கவேண்டும். இல்லை யேல் அது எமக்கு ஆபத்தாகி விடும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணிக்கு ஆதரவளித்த இரு பௌத்த குருமார்களும் ஆரம்பத்திலிருந்து எமக்கு ஆதரவைத் தெரிவித்திருந்தார்கள். எமது பிரசாரத்தில் கலந்துகொண்டவர்கள். அதோடு, எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை அங்கீகரித்து அதே அடித்தளத்தை தமது தேர்தல் பிரசாரமாகக் கொண்டு, தமது தேர்தல் பிரசாரத்தினை மேற்கொண்டவர்கள்.

இப்படிப்பட்டவர்கள் ஏன் சபாநாயகர் தேர்தலில் இப்படி நடந்தார்கள் என்பது புரியாத புதிராக உள்ளது. ஒரே குறிக்கோளான தர்மராஜ் சிய கொள்கை கொண்ட பௌத்த குருமார்கள் - ஒருவருக்கு ஒருவர் எதிராக வாக்களித்தமை கேலிக்குரிய விடயம் எனவும் அவர் தெரிவித்தார்.

# அமைச்சுச் செயலாளர் நியமனம் சிறுபான்மையினர் புறக்கணிப்பு

(கொழும்பு)

அமைச்சுக்களின் செயலாளர் நியமனத்தில் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

35 அமைச்சர்களுக்கான செயலாளர்களில், இருவர் மட்டுமே தமிழர் எனவும், இதில் முஸ்லிம்கள் எவரும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மலையக சமூக கட்டுமான அமைச்சின் செயலாளராக பி.இராமானுஜமும், வடக்கு விவசாய சந்தைப்படுத்தல் அபிவிருத்தி இந்து விவகார தமிழ்மொழிப் பாடசாலைகள் மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் செயலாளராக கே.மகாநந்தன் என்பவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். வேறு தமிழர் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதேவேளை, முஸ்லிம் தரப்பிலிருந்து அமைச்சு செயலாளர்கள் எவரும் நியமிக்கப்படாமை குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப்ஹக்கீம்- இது அரசாங்கத்தின் பாரபட்ச மான செயல் எனக்குறிப்பிட்டார்.

# பிக்குகள் மீதான அச்சுறுத்தல்; நடவடிக்கை எடுக்க உத்தரவு!

(கொழும்பு)

பௌத்த பிக்குகளுக்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நடைபெற்றுமுடிந்த பொதுத் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத்திற்குத் தெரிவான பௌத்தபிக்குகளுக்கும், ஏனைய பிக்குமாருக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

தமக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகப் பல பிக்குமார்கள் முறைப்பாடு செய்துள்ளதாக நாடாளு மன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் விகாரைக்கு முன்பாக கறுப்புகொடிகளைக் கட்டிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன், வெல்லவாயப் பகுதியில் ஜாதிக ஹல உறுமயவுக்கு எதிராகச் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த இளைஞர்கள் சிலரும் கைதானார்கள்.

இவர்களுக்கெதிரான சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

# சபை முதல்வர் பதவிக்கு ஹசன் அலியை பரிந்துரை

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

நாடாளுமன்றத்தின் அடுத்தகட்ட பதவிகள் எதிர்க்கட்சியிலிருந்து தெரிவாகுமாகவிருந்தால், தமது சார்பில் கட்சியின் செயலர் ஹசன் அலியையே பரிந்துரைக்கப்போவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சபாநாயகர் பதவி ஐக்கிய தேசிய முன்னணிக்குச் சென்றுள்ளநிலையில், சபை முதல்வர் மற்றும் பிரதிக்குழுக்களின் தலைவர் ஆகிய பதவிகளும் பெரும்பான்மை பலத்தைக் கொண்ட எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசிய முன்னணிக்கே செல்லவேண்டும் எனக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. (01)

# தற்போதைய அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டும்

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

நிலையான அரசியலமைப்பு ஒன்று இருக்கக்கூடிய வகையில் தற்போதைய அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்படவேண்டுமென முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதனை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளினதும் இணக்கப்பாட்டைப் பெறவேண்டுமென்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஏதேனும் கட்சி ஒன்றினதோ அல்லது தனிநபர் ஒருவரினதோ விருப்பு வெறுப்புக்களுக்கு அமைய அரசியலமைப்பு மாற்றம் செய்யப்படலாகாது என்றும், 25 ஆண்டு கால பழமை வாய்நத தற்போதைய அரசியல் யாப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்பதை ஒப்புக்கொள்வதாகவும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமானால் சகல அரசியல் கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடனும், தூரநோக்குடனும் அவை மாற்றப்படவேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகளை சந்தித்த பின்னர், கொழும்பு தனியார் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

# கைதான சிங்கள இளைஞர் காவல்துறையினரால் விடுதலை

தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்த சிங்கள இளைஞர் ஒருவரை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக தமிழீழ காவல்துறையினர் விடுதலை செய்தனர்.

கிளிநொச்சியில் ஒப்பந்த அடிப்படையின் நிமித்தம் வேலையில் இருந்த மாத்தறையைச் சேர்ந்த சஜித் ஹேமந்த என்ற இந்த இளைஞரை ரி-56 ரக துப்பாக்கியு டன், கடந்த ஆண்டு தமிழீழ காவல்துறையினர் கைது செய்து, தமிழீழ நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள்.

இவரின் வழக்கு நீதிமன்றத்தில் தொடர்ந்து நிலுவையில் இருந்ததனால், விசாரணைக்காக இவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவரின் தந்தையார் காலமாகிவிட்ட செய்தி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமூடாகக் கிடைத்ததை யடுத்து, இதனைக் கருத்திற்கொண்டு நல்லெண்ண நோக்கோடு இவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக விடுதலை செய்தனர்.

### சமாதான முயற்சி ஜே.வி.பிக்கு அறிவிக்கப்பட்டது

சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்க முன்வரும்படி, நோர்வே அரசாங்கத்திடம் ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுப்பதறகு முன்பதாக தம்மு டன் கலந்தாலோசித்ததாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப் பினரும், மத்திய குழு உறுப்பி னருமான சந்திரசேகரன் தெரி வித்தார்.

நோர்வே எந்த நோக்கத்துக்காக வருகிறதோ அந்த நோக்குடன் தனது வேலைகளை நிறுத்திக்கொண்டால், தமக்கு எந்த வித பிரச்சினையும் இல்லையென கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக தாம் கருதிய காரணத்தினாலேயே நோர்வேத் தரப்பு அனுசரணையை கடுமையாக விமர்சித்து எதிர்த்து வந்ததாகவும், நாட்டின் இறைமைக்கு குந்தகம் இல்லாத வகையில் நோர் வேயின் பங்களிப்பு அமையும் பட்சத்தில் அதனை ஜே.வி.பி. ஏற்றுக்கொளளும் என்றும் சந்திரசேகரன் கூறினார்.

# பாடசாலை மாணவர்களுக்கான 500 அடையாள அட்டைகள் வந்தன

பாடசாலை மாணவர்களின் 500 அடையாள அட்டைகள் வந்திருப்பதால், பாடசாலை அதிபர்கள் தொடர்புகொண்டு அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ்.செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரியே இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த அடையாள அட்டையில் பெரும்பாலானவை இந்தமுறை க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுடையது என்பதால், அவற்றை உடன்பெற்று விநியோகிக்க அதிபர் முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட மக்களுக்குரிய 5 ஆயிரம் வரையிலான அடையாள அட்டைகள் வவுனியாவில் தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகளுக்குள் கிடப்பதால், அவற்றிற்குரியவர்கள் அடிக்கடி யாழ்.செயலகத்திற்கு வருகைதந்து, அதிகாரிகளுடன் முரண்படுவதால், அவர்களுக்கு மாற்றுவழி ஏதேனும் அறிமுகப்படுத்துவதே சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

### நிர்வாகசேவைக்கு தெரிவானோருக்கு மூன்று மாதகாலப் பயிற்சி

இலங்கை நிர்வாகசேவைக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு யாழ்.மாவட்டத்தில் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

தற்போது கொழும்பில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் இவர்களுக்கு, எதிர்வரும் மே மாதம் முதல் மூன்று மாதங்களுக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள அரச அதிபர் செயலகம், உதவி அரச அதிபர் செயலகம் ஆகியவற்றில் இந்தப் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. (ப)

### பாஸ் நடைமுறையை நீக்குமாறு மனித உரிமை ஆணைக்குழு வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் படையினரால் நடைமுறைப்படுத்தப்படும் வதிவிட அனுமதி நடைமுறையை நீக்குமாறு யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கருத்திற்கொண்டு இந்த வதிவிட அட்டை அனுமதிமுறை நீக்கப்படவேண்டும் என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரி சுசில் சந்திரபாலவுக்கு - மனித உரிமை ஆணைக்குழு அனுப்பி வைத்த கடிதம் ஒன்றிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் கிழக்கு மாகாணம் செல்கின்றனர்

இலங்கை தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், இந்த மாதம் இறுதிப்பகுதியில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர் எனக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

கிழக்குப் பகுதி மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் தேவைகளை அறிந்துகொள்வதோடு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்துவதே இந்த விஜயத்தின் முக்கிய நோக்கம் எனக் கருதப்படுகிறது.

அண்மைக்காலத்தில் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதத்தின் பின்னர், இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மேற்கொள்ளும் முதலாவது விஜயமாக இது அமையவுள்ளது.

## மன்னார் அடம்பனில்

# தியாகதீபம் திலீபன் மருத்துவமனை இரண்டாம் ஆண்டு நிறைவுவிழா

(மன்னார்)

மன்னார் அடம்பன் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையின் இரண்டாம் ஆண்டு விழா நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

முதல் நிகழ்வாகப் பொதுச்சுடரினை தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக்கொடியினைத் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.

தியாகதீபம் திலீபன் ஈகச்சுடரினையும், மலர்மாலையையும் தியாகதீபம் திலீபன் மருத்துவசேவைப் பொறுப்பாளர் தமிழ்வாணன் ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையினை மன்னார் அடம்பன் தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை நிர்வாகக்குழு தலைவர் நிகழ்த்தினார். அடுத்து, செயற்றிட்ட அறிக்கையினை மன்னார் - அடம்பன் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவை நிர்வாகக்குழு செயலாளர் நிகழ்த்தினார்.

உரைகளை மன்னார் தமிழர் புனர்வாழ்வு கழகத் தலைவர் அரியநாயகம் குருஸ், மன்னார் கல்வி மேம்பாட்டு தலைவர் ஜி.ஜேக்கப், பி.எம்.செபமாலை மற்றும் மனனார் அடம்பன் - தியாகதீபம் மருத்துவசேவை சிறப்பு மருத்துவப் போராளி சுகந்தனும் நிகழ்த்தினர்.

சிறப்புரையினை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன் நிகழ்த்தினார். இந்த மருத்துவமனைக்கான நோயாளர் அம்புலன்ஸ் வண்டியினை வெளிநாட்டு தமிழ் அமைப்பின் நிதியுதவியுடன் கொள்வனவு செய்யப்பட்டது.

இந்த வண்டியினை தமிழீழ விடுதலைப் புலிகளால் மன்னார் - அடம்பன் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவை நிர்வாகக் குழுவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர், ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் மற்றும் ஏனைய துறைசார் பிரிவுப் பொறுப்பாளர்கள், போராளிகள், சுகாதாரத் தொண்டர்கள், பணியாளர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள், பொது மக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நடவடிக்கை அதிருப்தியளிக்கிறது என்கின்றார் மியாண்டட்!



பயிற்சியாளர் பதவி விடயத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடந்து கொள்ளும்விதம் அதிருப்தி அளிப்பதாக பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் மியாண்டட் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும டெஸ்ட் தொடர்களில் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அந்த அணியின் பயிற்சியாளர் மியாண்டட்டை அந்தப் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படும் நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

என்னை பதவி விலக்குவது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டவட்டமாக எதையும் தெரிவிக்கவில்லை. இது என்னை அவமானப்படுத்தும் செயலாகும். எனது பதவியின் எதிர்காலம் என்னவென்று தெரியாமல் இக்கட்டான நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை - இது குறித்து மியாண்டட் கூறியதாக பாகிஸ்தான் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பாகிஸ்தான் அணியின் கப்டன் பதவியில் இன்சமாம் நீடிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளபோது, எனது பதவி பற்றி மட்டும் கருத்து எதனையும் கிரிக்கெட் சபை ஏன் இதுவரை தெரிவிக்கவில்லை? எனது ஒப்பந்த காலம் முடிவடைய இன்னும் ஒரு வருடம் உள்ளது. என் மீது எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, என்னை இப்படி அவமானப்படுத்துவது சரியான செயலல்ல.

இந்தியாவுக்கு எதிரான தோல்வி தான் என்னுடைய பயிற்சியாளர் பதவிக் காலத்தில் பாகிஸ்தான் அணி பெற்ற மோசமான தோல்வியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதிவரை கப்டன் பதவியில் இன்சமாம் நீடிப்பார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. ஆனால் பயிற்சியாளர் மியாண்டட், அதிகாரி ஹரூன் ரஷீத் ஆகியோரின் பதவி குறித்து கிரிக்கெட் சபை முடிவு எதனையும் அறிவிக்கவில்லை.

இந்த விடயத்தில் அவசரப்படப் போவதில்லை என்றும், இதுகுறித்த முடிவை அடுத்த மாத நடுப்பகுதியில் எடுக்கப்போவதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவா ஷஹாரியார்கான் தெரிவித்தார்.

ஏற்கனவே இரண்டு முறை பயிற்சியாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, 3 ஆவது முறையாக பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட மியாண்டட்டின் பதவி குறித்து ஷஹாரியார்கான் கருத்தெதையும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை - என்னை விட யாராவது ஒருவர் இந்தப் பணியைச் சிறப்பாகச் செய்வார்கள் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நினைத்தால் அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள் எனத் தெரிவித்த மியாண்டட், எனது பயிற்சியாளர் பதவியின்போது பங்களாதேஷ், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆகிய அணிகளை பாகிஸ்தான் வீழ்த்தியிருப்பதாகவும், ஒரு டெஸ்ட் தொடரில் தோல்வியடைந்ததற்காக என்னை நீக்குவது நியாயமல்ல எனக் கூறினார்.

மியாண்டட்டுக்கு பதிலாக தற்போது பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளராக இருக்கும் டேவ்வட்மோர் பாகிஸ்தான் அணியின் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.சி.சியின் தலைமையகத்தை இடம் மாற்றுவதற்கு தீர்மானம்

சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமையகத்தை ஐக்கிய அரபு எமரேஜ்ஜுக்கு மாற்றுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த, சர்வதேச கிரிக்கெட் சபை உறுப்பினர்கள் அடுத்தவாரம் டுபாய் வரவுள்ளனர்.

இது குறித்து அரச அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் ஈசான் மணி, தலைமை நிர்வாகி மால்கம் ஸ்பீட் ஆகியோர் அடுத்த வாரம் டுபாய் வரவுள்ளதாகக் கூறப்படுகிறது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் முக்கிய அனுசரணையாளராக டுபாய் அரசின் எமிரேட்ஜ் எயர்லைன்ஸ் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் சர்வதேச கிரிக்கெட் சபையின் சார்பாக நடைபெறும் பல்வேறு கூட்டங்கள் இங்கு நடைபெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய - பாகிஸ்தான் அணிகளின் காட்சி கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் அபுதாபியில்!

அடுத்த மாதம் 14 ஆம் திகதி அபுதாபியில் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான காட்சிக் கிரிக்கெட் போட்டி பகல் இரவாக நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு சுமார் 50 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது

எண்ணைவளம் மிக்க அரபு நாட்டில் நடைபெறவிருக்கும் இந்தப் போட்டியானது 20 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய சையத் கிரிக்கெட் ஸ்ரேடியத்தில் நடைபெறவுள்ளது.

கங்கூலி தலைமையிலான இந்திய அணி இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான் அணிக்கு கப்டனாக இன்சமாம் இருப்பார் என்று அபுதாபி கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவரும் ஐக்கிய அரபு எமிரேஜ்ஜின் அமைச்சருமான முபாரத் அல் - நாஹீயான் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடரை இழந்த பின்னர் இரு அணிகளும் மோதும் முதல் போட்டியிதுவாகும்.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் ஷேவாக், சச்சின் இருவரும் கலந்து கொள்ளமாட்டார்கள் என்றும், பாகிஸ்தான் அணியில் அக்தர் கலந்து கொள்ளமாட்டார் என்றும் தெரிகிறது.

ஏறக்குறைய 4 வருடங்களுக்குப பின்னர் ஐக்கிய அரபு எமிரேஜ்ஜில் இந்திய அணி விளையாடவுள்ளது.

2000 ஆம் ஆண்டு சார்ஜாவில் நடைபெற்ற கொக்ககோலா போட்டியே இந்திய அணி விளையாடிய முதல்போட்டியாகும்.

இந்திய - பாகிஸ்தான் இருநாடுகளும் வருவதன் மூலம் சர்வதேச போட்டிகள் இங்கு தொடங்க மிகவும் வசதியாக இருக்கும் என்றும் இதற்காக இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் சபைகளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக முபாரத் தெரிவித்தார்.

சமீபத்தில் திருமணம் முடித்த ஷேவாக் இந்தப் போட்டியில் பங்கு பற்றமாட்டார் என்றும் இந்தப் போட்டியின்போது லண்டனில் இருக்கும் சச்சினை விளையாடவைக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்றும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவிததனர்.

இந்தப் போட்டியில் இரண்டு கார்களும் பரிசாக வழங்கப்படவிருக்கின்றன. இரு அணிகளைச் சேர்ந்த சிறந்த வீரர்களுக்கு கார் பரிசாக வழங்கப்படவுள்ளது.

## நியூஸிலாந்து முழுப் பலத்துடன் இங்கிலாந்து செல்லவுள்ளது!

நியூசிலாந்து அணியின் ஷேன் பொண்ட், டரல் ர.்.பி, நதன் அஸ்ரில மூவரும் முழு உடற்தகுதியை அடைந்துள்ள நிலையில் முழு பலத்துடன் இங்கிலாந்து பயணம் மேற்கொள்விருக்கிறது நியூசிலாந்து அணி.

இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்று டெஸ்ட் போட்டிகள் கொணட தொடரில் விளையாட நியூசிலாந்து அணி நாளை இங்கிலாந்து செல்கிறது. இரு அணிகளுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி லோர்ட்சில் தொடங்குகிறது.

காயம் காரணமாக அவதிப்பட்டு வந்த ர.்.பி, பொண்ட் இருவரும் உடற்தகுதி சோதனையை வெற்றிகரமாக முடித்திருப்பதன் காரணமாக முழுபலத்துடன் நியூசிலாந்து அணி இங்கிலாந்து செல்கிறது.

ஷேன் பொண்ட் முதுகு வலியாலும், ர.்.பி, அஸ்ரில் இருவரும் கணுக்கால் வலியாலும் அவதிப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த மூவரும் இங்கிலாந்து பயணத்தைக் கருத்திற்கொண்டு முழு உடற்தகுதிபெற கடினமாக உழைத்ததாக நியூசிலாந்து அணியின் பயிற்சியாளர் ஜொன்பிரேஸ்வெல் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற இலங்கைப் பயணத்தின் போது ஷேன் பொண்டிற்கு காயம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. கடந்த நவம்பர் மாதம் கிளப் போட்டிகளில் ஷேன் பொண்ட் விளையாடினாலும் மீண்டும் அவருக்குக் காயம ஏற்பட்டது. இதனால் பாகிஸ்தான், தென்னாபிரிக்காவிற்கு எதிரான தொடரில் பொண்ட் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது.

அதன்பின்னர் ஷேன் பொண்டின் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துக்கு எதிராக டிராண்ட பிரிட்ஜில் நடைபெறவுள்ள 3 ஆவது டெஸ்ட் போட்டியோடு டெஸ்ட் கிரிகெட்டில் இருந்து ஓய்வுபெறப்போவதாக நியூசிலாந்து வீரர் கிரிஸ் கெய்ன்ஸ் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

3ஆவது டெஸ்ட் போட்டி வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி தொடங்குகின்றது.

நியூஸிலாந்து அணியின் விவரம் வருமாறு -

ஸ்டீபன் பிளமிங் (கப்டன்), நதன் அஸ்ரில், ஷேன்பாண்ட், கிரிஸ கெய்ன்ஸ், மார்டின், மில்ஸ், மேக்கல்லும், மேக்மில்லன். ஓரம், பாப்ஸ், ரிச்சர்ட்சன், ஸ்டைரிஸ், வெட்டோரி.

## திலகரத்ன நீக்கம்!



இலங்கை - சிம்பாப்வே அணிகள் இடையே தற்போது ஒரு நாள் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் முடிவடைந்த பின்னர் 2 டெஸ்ட் போட்டி நடக்கவுள்ளது. டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் கப்டன் திலகரத்ன அணியில இருந்து நீக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை போட்டிக்கு பிறகு அவர் ஒருநாள் போட்டியில் ஓய்வுபெற்றார்.

டெஸ்ட் அணிக்கு கப்டனாக இருந்த அவர் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான மோசமான தோல்வியால் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். தற்போது திலகரத்ன அணியில் இருந்தே கழற்றிவிடப்பட்டுள்ளார். டெஸ்ட் தொடர் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பம. [illegible]றது.

## விளையாட்டு

## இந்திய வீரர்களின் துடுப்பாட்டம் இளம் வீரர்களின் கையிலுள்ளது!

### — ராகுல் ராவிட் நம்பிக்கை

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை இளம் வீரர்களின் கையில் பாதுகாப்பாக இருப்பதாக இந்திய அணியின் துணைத்தலைவர் ராகுல் ராவிட் தெரிவித்தார்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களான சச்சின், கங்கூலி, ராவிட் இவர்களுக்குப் பின்னர் அணியின் துடுப்பாட்ட வரிசையை தூக்கி நிறுத்தப்போவது யார் என்ற கேள்வி ரசிகர்கள் மனதில் இல்லாமல் இல்லை.

ஆனால் இந்த மூவரும் ஓய்வு பெறும்போது இந்திய அணி சிறந்த நிலையிலேயே இருக்கும் என்று ராவிட் நம்பிக்கை தெரிவித்தார்.

கங்கூலி, ராவிட், சச்சின் மூவருடைய வயதும் 30 களில் உள்ளது. இவர்களுக்குப் பின்னர் இந்திய அணிக்கு கைகொடுக்கப்போவது யார் என்ற ரசிகர்களின் சந்தேகத்தை ராகுல் தீர்த்துவைத்துள்ளார்.

இது குறித்து ராவிட் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது - இது பற்றி நான் எப்போதுமே கவலைப்பட்டதில்லை. ஏனெனில் இளம் வீரர்களின் கையில் இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை பாதுகாப்பாக உள்ளது. யுவராஜ்சிங், ஆகாஷ் சோப்ரா, முகமது கை.்.வ் போன்ற சிறந்த வீரர்கள் இருக்கையில் இதுபற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும். தனக்கு கிடைத்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி சதம் அடித்து யுவராஜ் தனது திறமையை நிரூபித்துள்ளார். சோப்ரா சிறந்த வீரராக உருவாகி வருகிறார். ஹேமங் பதானி, ரோஹான் கவாஸ்கர், முகமது கை.்.வ ஆகியோர் தங்களுக்குக் கிடைத்த குறைந்த வாய்ப்புக்களையும் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளனர்.



மூத்த வீரர்களின் அடிச்சுவட்டைப பின்பற்றி இளம் வீரர்கள் விளையாடி வருகிறார்கள். நாங்கள் ஓய்வு பெறும் போது இந்திய அணி நிச்சயம் நல்ல திறமையை அடைந்து விடும் என்று கூறினார்.

## 5 பாகிஸ்தான் வீரர்கள் மீது விசாரணை ஆரம்பமானது!

பாகிஸ்தான் அணியின் 5 முன்னணி வீரர்கள் மீதான விசாரணையை மருத்துவக்குழு நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது.

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான சபீர் அகமட், முகமது சமி, உமர்குல், விக்கெட் கீப்பர் மொயின்கான், சகலதுறை ஆட்டக்காரர் அப்துல் ரசாக் ஆகியோர் மீதான மருத்துவக்குழு விசாரணை நேற்றுமுன்தினம் தொடங்கியது. இந்தக் குழு முன் இன்று ஆஜராவதாக வேகப்பந்து வீச்சாளரான அக்தர் பாகிஸ்தான் கிரிக்கெட்சபைக்குத் தெரிவித்துள்ளார்.

விளம்பரப் படத்தில் நடிப்பதற்காக மும்பாய் வந்த அக்தர் நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் திரும்பினார். இதனால் இன்றுதான் தன்னால் மருத்துவக் குழு முன்பு ஆஜராக முடியும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த வீரர்கள் அனைவருக்கும் இந்தியாவுக்கு எதிரான தொடரின் போது ஏற்பட்ட காயமானது உண்மையா? இல்லையா? என்பதைக் கண்டறியவே இந்த விசாரணை நடத்தப்பட்டது.

ராவல்பிண்டியில் நடைபெற்ற 3 ஆவது டெஸ்ட் போட்டியின் 3 ஆம் நாள் ஆட்டத்தின்போது காயம் ஏற்பட்டதாக கூறி அக்தர் பந்து வீசவில்லை.

இந்தப் போட்டியில் பாகிஸ்தான் தோல்வியடைந்து இந்தியாவிடம் தொடரை இழந்தது. இந்த முக்கிய டெஸ்ட்டில் அக்தர் விளையாடாத விடயம் பெரும் பிரச்சினையை கிளப்பியது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து விசாரணை நடத்த 4 பேர் கொண்ட மருத்துவக் குழுவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமித்தது. இந்தக்குழு நேற்றுத் தனது விசாரணையை தொடக்கியது.

இந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி ரமீஸ்ராஜாவுக்குப் பதில் வேறு ஒருவரை நியமிப்பது குறித்து வெளியான தகவல்களை சபைத் தலைவர் ஷஹாரியார்கான் மறுத்தார்.

ரமீஸ்ராஜாவின் செயற்பாடு திருப்தி அளிப்பதாக இருப்பதாகவும் எனவே அவருக்குப் பதில் வேறுயாரும் நியமிக்கப்பட மாட்டார்கள் என்று ஷஹாரியார்கான் கூறியதாக உள்ளூர் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வர்ணனையாளராகவும் கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாகியாகவும் ரமீஸ்ராஜா இருந்து வருவது குறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந்துவருவது குறிப்பிடத்தக்கது.

வீரர்களுக்கான ஒப்பந்த முறை பற்றிய ஆலோசனை நடந்து வருவதாகவும் ஷஹாரியார்கான் கூறினார்.

கப்டன் இன்ஸமாம், துணைக் கப்டன் யூசுப் யுகானா இருவரும் ஒப்பந்த முறையை அறிமுகப்படுத்த வலியுறுத்திவருவது குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஜெயந்தி விழா

(வடமராட்சி)

சிவமுருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் 99 ஆம் ஜெயந்தி விழா - செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கடவுள் சந்நிதி, உடுவிலில் நடைபெற வுள்ளது.

அதனைத் தொடர்ந்து விசேட பூசை, பிரார்த்தனைகள், ஆன்மீகச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளது. (46)

### பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடாத்தப்பட்ட பண்டிதர் பட்டமளிப்பு விழா - அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். வண்ணார் பண்ணை நாமகள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

2003 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தோருக்கே இந்த பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது.

### தீவக வலய மாணவர்களுக்கு இன்றுமுதல் சத்துணவு

(வேலணை)

தீவக வலய பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கப்படவுள்ளது.

கல்விக்கான உணவுத்திட்டத்தின் ஒரு செயற்பாடாகவே சத்துணவு இன்றுமுதல் கோட்டரீதியாக தீவகவலயத்தைச் சேர்ந்த அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகத் தீவக வலயக் கல்வி அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர். (91)

# பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண நாம் தொடர்ந்தும் பாடுபடுவோம்

## தமிழரசுக்கட்சி பொதுக்கூட்டத்தில் மாவை சேனாதிராசா

(யாழ்ப்பாணம்)



தமிழ் மக்கள் ஓர் அணியின்கீழ் திரண்டு நின்று சமாதானத்தினைப்பெற விரும்புகின்றார்கள் என்று நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தல் நிரூபித்து இருக்கின்றது என தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பொதுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

இத்தமுறை நடைபெற்ற தேர்தலில் நான் உழைத்தது போதாது. நான் முக்கியமாகத் தேர்தலில் போட்டியிட்டது மக்கள் வெற்றிபெறவேண்டும் என்ற நோக்கமேயே. எனது இலட்சியம் அதிக வாக்குகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கல்ல. தமிழர்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே. பதின்மூன்றாவது நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் மாணவர்களின் பணி பெரியது. எமது வெற்றிக்கு உழைத்த தமிழ் நெஞ்சங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

எனக்குக் கடந்த இரண்டு தேர்தலையும்விட இம்முறை அதிகம் வாக்குகள் கிடைத்துள்ளன. நாம் இளைஞர் சமுகத்தினை அரசியல் தெளிவுடையதாகக் கட்டியெழுப்பவேண்டும். இளம் சமுதாயத்தின் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். இப்போது தென்னிலங்கையில் அரசியல் நகர்வுகளை தேர்தலின் முன்பே நாம் தெரிவித்தோம்.

ஜனாதிபதி, தான் பிரதமராக வரவேண்டும் என்ற நோக்குடனே 12 ஆவது நாடாளுமன்றத்தைக் கலைத்ததுடன், இந்த விடயத்தில் கடுமையாக, ஜனாதிபதி சுயநலநோக்குடன் செயற்பட்டுள்ளார்.

ஜனாதிபதி - சபாநாயகர் தெரிவிற்குமுன்பு சமாதானம் தொடர்பாக எம்முடனோ, நோர்வே அரசுடனோ, விடுதலைப் புலிகளுடனோ பேசவில்லை. எமது கடுமையான அழுத்தங்கள் மத்தியிலும் குற்றச்சாட்டுக்கள் மத்தியிலும் தற்போது நோர்வே அரசுடன் சமாதானம் தொடர்பாகப் பேச்சு நடத்தக் கோரியுள்ளார். இடைக்கால தன்னாட்சி தீர்வு ஒன்று எமக்குக் கிடைகசு மானால், 51 நாடுகள் 1500 கோடி ரூபாவுக்கு மேல் முதற்கட்டமாக வழங்குவதற்கு முன் வந்துள்ளன.

ஜனாதிபதி தனது கொள்கைகளைப் பகிரங் கமாக அறிவித்தபோதும், அதனை பின்பற்ற தவறிவிட்டார். மக்களின் அபிலாசைகளை ஜனாதிபதி மதிக்கவேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். தற்போதுள்ள அரசியல் நகர்வில் சபாநாயகர் பதவி என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. நாடாளுமன்றத்தில் புத்த பிக்குகள் கடத்தப்படும் சம்பவங்களும்கூட நடைபெறுகின்றன. தமிழர்கள் பிரச்சினைகளைச் சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டி தீர்வு ஒன்றைப்பெற இனிவரும் காலத்தி லும் முழுமையாகப் பாடுபடுவோம்.

தற்போது அதிகார பரவலாக்கத்தினை கடு மையாக எதிர்ப்பவர்கள் ஆட்சிக்கு வந்துள்ளனர். ஆளும் கட்சிக்குள்ளேயே அதிகாரப் போட்டிகள் ஏற்பட்டுள்ள. நாம் சபாநாயகர் தெரிவில் யாருடன் இணைவது எனப் பல வார காலமாகக் கலந்தா லோசித்து, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் ஓர் முடிவுற்கு வந்தோம். நாம் தென்னிலங்கை அரசியலை முழுமையாக ஆதரிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (தீ)

## சின்னஞ்சிறு செய்திகள்

### மருதங்கேணியில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு

(வடமராட்சி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேலும் 729 குடும்பங்களுக்கு மீள்குடியேற்றக் கொடுப்பனவாகிய 25 ஆயிரம் ரூபா அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளது.

இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு 20 மில்லியன் ரூபா யாழ். செயலகத்திற்குக் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கபபடுகிறது.

மேலும் யாழ்.மாவட்டத்தில் இந்த வாரம்முதல் 6 ஆயிரத்து 475 குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (122)

### தேர்தல் கடமையில் ஈடுபட்டோருக்கு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்று முடிந்த 13 ஆவது நடாளுமன்ற தேர்தல் கடமையில் ஈடுபட்ட வலிகாமக் கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், ஏனைய பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் அனைவரும் எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக தஙகளுடைய கோரிக்கைப் படிவங்களையும், உறுதிச் சிட்டைகளை யும் - வலிகாமம் கல்வி வலயத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (44)

# அடிப்படை வசதிகளைச் செய்து தருமாறு அரச அதிபருக்கு நெடுந்தீவு மக்கள் மகஜர்

அடிப்படை வசதிகளற்றிருக் கும் நெடுந்தீவு மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள் எனக்கோரும் மகஜர் ஒன்றை யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் நெடுந்தீவு மக்கள் சமர்ப்பித்துள் ளனர்.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையிலான குழுவொன்று நேற்று முன்தினம் நெடுநதீவுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலமைகளை நேரிற்சென்று பார்வையிட்டதுடன், அஙகுள்ள மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர்.

அந்தவேளை, அங்குள்ள மக்கள் தமது குறைபாடுகள் அடங்கிய மகஜர் ஒன்றை அரச அதிபரிடம் சமர்ப்பித்திருந்தனர்.

அதில் தெரிவிக்கப்பட்டிருக் கும் விடயங்கள் வருமாறு -

நெடுந்தீவில் மோட்டார் படகுச் சேவை 1937 ஆம் ஆண்டு முதல் சீராக இடம்பெறவேண்டு மென்பதற்காகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அரச அதிபர்கள் எடுக்கும் முயற்சிகள் நெடுந்தீவு மக்களுக்குப் பெரிதும் ஏமாற்றத்தையே அளிக்கிறது. அவற்றால் போக்குவரத்தோ, கல்வி நடவடிக்கைகளோ, சுகாதார வசதிகளோ, மீன் பிடித்தல் தொழிலோ, சிறுகைத தொழிலோ, மின்சார வசதிகளோ சீரடைந்தாக இல்லை.

இங்குள்ள இறங்குதுறை திருத்தப்படாதிருப்பதால், பொது மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுகிறது. அதேவேளை இங்குள்ள உள்ளூர் வீதிகள்கூட பல காலமாகத் திருத்தப்படாதநிலையில் உள்ளன. இதனை திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இங்குள்ள வைத்தியசாலைக்கு மேலும் ஒரு வைத்தியரை நியமிப்பதுடன், மருத்துவத் தாதி, ஆண் தா்தி போனறோரையும் நியமித்து உதவுதல் வேண்டும்.

இங்குள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நீக்கி உதவுவதுடன், கணித, விஞ்ஞான பிரிவுகளை க.பொ.த. உயர்தர மாணவர்கள் கற்பதற்கு ஏற்ற வகையில் தரமான ஆசிரியர்களை இங்கு நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இங்கு மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மக்கள் எதிர் நோக்கும் இந்திய மீனவரின் அடாவடித்தனமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்து வதுடன், மீனவக் குடும்பங்களுக்குக் குடியிருப்பு வசதிகளையும் அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

நெடுந்தீவு மக்களுக்கான மின் விநியோகத்தை சீராக்குவதுடன், சூரிய ஒளி மூலமான மின்விநியோகத்தை மேற்கொள்ள வசதி ஏற்படுத்தித் தரு மாறும் வேண்டுகிறோம்.

அதேவேளை, நெடுந்தீவை ஒரு சுற்றுலா மையமாக மாற்றும் வகையிலான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் எனவும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது. (113)

### கும்பாபிஷேகம்

(உடுவில்)

மல்லாகம் பத்திரகாளி அம்பிகா சமேத வீரபத்திர சுவாமி கோவில் வைரவர் நூதன பிர திஷ்டா மகா கும்பாபிஷேகமும் வசந்த மண்டப திறப்பு விழாவும் எதிர்வரும் ஞாயிற்யுறுக்கிழமை காலை 6.45 மணிமுதல் 7.30மணி வரைநடைபெறவுள்ளது. (101)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

எட்டாவது அகவையில்



பெயர் : பா.தர்ஷிகா
முகவரி : கரவெட்டி.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : சா.தர்சிகா
முகவரி : மருதங்கேணி வடக்கு.

## வடமராட்சி கட்டைக்காட்டில்

# மாவீரர்களின் நினைவாக பஸ்தரிப்பு நிலையம் அமைப்பு!

வடமராட்சி கிழக்கில் மாவீரர்களின் நினைவாக பேருந்து தரிப்பு நிலையம் ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்திலுள்ள கட்டைக்காடு கிராமச்சந்தியில் அமைக்கப்பட்ட இப்பேருந்து தரிப்புநிலையத்தை, வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளரும், தாளையடி பங்குத்தந்தையும் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்கள்.

இந்தப் பேருந்து தரிப்புநிலையம் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாவீரர்களான மேஜர் தணிகைமாறன், வீரவேங்கை தணிகைமாறன் ஆகிய இருவரின் நினைவாக அவர்களின் பெற்றோர்களினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (122)

# கடைத்தொகுதி அமைக்கப்படுகிறது

நல்லூர் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் திருநெல்வேலி சந்தைப் பகுதியில் 7 லட்சம் ரூபா செலவில் பாரிய கடைத் தொகுதியொன்று அமைக்கப்படவிருக்கின்றது.

இதேசமையம் திருநெல்வேலி சந்தைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு நீர் விநியோகம் செய்யும் பொருட்டு 1500 லீற்றர் கொள்ளவு உடைய தண்ணீர்த் தாங்கியொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் வாலையம்மன் கோயிலுக்குப் பின்புறமாகவுள்ள செங்குந்தா வீதியும் நல்லூர் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.




தந்தை செல்வாவின் 27 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு - தந்தை செல்வாவின் உருவச்சிலை, சமாதி ஆகியவற்றிற்கு அஞ்சலி செலுத்தியவர்களைப் படத்தில் கானலாம்.




# காரில் கறுப்புப் பெட்டி



மேற்கு நாட்டில் சிறுவர்கள் வாகனங்களை ஓட்டுவது என்றால் ஒரு பொழுதுபோக்கு. அதிலும் கட்டிளமைப்பருவத்தினர் தம்முடைய வயது வேகத்தில் வாகனங்களை ஓட்டுகிறார்கள் என்று சொல்வதிலும் பார்க்க, பறக்கிறார்கள் என்றே கூறவேண்டும். ஆகவே, கூடுதலான கார்களில் கறுப்புப் பெட்டி பொருத்தப்பட்டிருக்கின்றது. விபத்து ஏற்படும்பொழுது அந்த விபத்துப்பற்றிய விபரங்களை இது துல்லியமாகக் காட்டுகிறது. அதிலும் என்ன விசேடம் என்றால் - இந்தக் கார்களின் கறுப்புப் பெட்டியைக் கட்டுப்படுத்துவது செய்மதிகளாகும். இந்தக் கறுப்புப் பெட்டியினது தொடர்பு வீட்டிலிருக்கும் பிரதான கணினியுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பிள்ளைகள் எங்கு சென்றாலும் அவர்கள் பற்றிய முழு அறிக்கையும் அவர்கள் வீட்டுக்குச் சென்றுவிடும். ஏறக்குறைய இதற்கு 600 ஸ்ரேலிங்பவுண்கள் செலவாகிறது. அதைவிட, மாதாந்தக் கட்டணமும் உண்டு. இதன் காரணமாக அமெரிக்க, பிரிட்டிஷ் கட்டிளமைப் பருவத்தினர் வயிற்றில் இனிப் புளிகரைத்தநிலைதான்.

# துரிதமான ஊசி



எடுத்தவுடனேயே ஊசி ஏற்றுவது தற்போதைய மருத்துவக் கலாசாரத்தில் நாகரிகமாகப் போய்விட்டது. குழந்தைகள் முதல் முதியவர்கள்வரை மருந்துகள் உட்கொள்வதைவிட ஊசி மருந்துகளையே அதிகம் விரும்புகின்றனர். அதற்குக் காரணம் உட்கொள்ளும் மருந்துகளிலும் பார்க்க ஊசி தருகின்ற உடனடி நிவாரணம். குறிப்பாக அவர்கள் வியாதி என்கின்ற நீரிழிவுநோய் ஊசிமூலம் கட்டுப்படுத்தப்படுகின்றது. ஆனால், தொடர்ச்சியாகக் குத்தப்படும் ஊசிகள் காரணமாகச் சில தீயவிளைவுகளும் உண்டு. அதிலும் இந்த ஊசிகளால் ஏற்படுத்தப்படுகின்ற துவாரங்கள் கிருமிகளின் தாக்கங்களுக்கு உட்படுகின்றன. இதன்மூலம் கிருமிகள் உடலுக்குள் செல்வதற்கு வாய்ப்பாகின்றது. ஆகவே, ஊசிகள் போடுவதைத் தடுக்குமாறு ஆலோசனை கூறப்பட்டுவருகின்றது. இருந்தாலும், துரித நிவாரணம் தரக்கூடியது ஊசிதான் - விழுங்கும் மாத்திரைகள் அல்ல.

# குரங்கின் மொழி



சிம்பன்சி எனப்படும் மனிதக் குரங்குகள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு சைகை மொழிகளை பாவிக்கின்றன. மனிதர்களும் எவ்வாறான சைகை மொழிகளை வெளிப்படுத்துகின்றனர் என்ற ஆய்வினை மேற்கொள்வதற்கு, மனிதர்களையும் இவ்வாறான பரிசோதனைகளுக்கு உட்படுத்தியிருந்தனர். பிரித்தானியாவின் உயிரியல் கழகம் 100 தொண்டர்களை இந்த ஆய்வுக்குப் பயன்படுத்தியிருந்தனர். சின்பன்சிகள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு மாறுபட்ட ஒலிகளை எழுப்பி முகபாவனைகளை மாற்றுவதை அவதானித்தனர். சிம்பன்சிகள் ஒலிகளை உருவாக்கி எவ்வாறு முகபாவங்களை மாற்றிக்கொள்கின்றன என்பதையும் அவதானித்தனர். பரிணாம வளர்ச்சியில் மனிதர்களுக்கும், குரங்குகளுக்கும் இடையே காணப்படும் மாறுபாடுகளையும் அவதானித்தனர். சிம்பன்சிகளுக்குப் பேசக்கற்றுக்கொடுக்கும் முயற்சிகள் நல்ல பலன்களைக் கொடுக்கவில்லை. உற்சாகமான நிலையை வெளிப்படுத்தும்போது சிம்பன்சிகள் 'ஊ' என்ற இரைச்சலுடன் வாயை முழுமையாகத் திறந்து சிரிப்பதை அவதானித்தார். அதேநரத்தில், மனக்குழப்பதை வெளிப்படுத்தும் நிலையில் உயர்ந்த தொனியில் 'ஊ' என்ற தொனியுடன் தமது குழுவை உசார்நிலைக்கு மாற்றியமைப்பதையும் அவதானித்தனர். இதேநேரத்தில் தமது இனக் குரங்குகளை வரவேற்கும்போது கைகளை விரித்துக் கொணடு கண்களை மூடியவண்ணம் இருப்பதையும் அவதானித்தனர். சிம்பன்சிகள் பயவுணர்வை வெளிப்படுத்தும் நிலையில் தோள்களை உயர்த்தி உடலைக் குறுக்கிக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளனர். தனது அதிகாரத்தை வெளிப்படுத்துவதற்காக அதிக ஒலியை எழுப்புகையில், கிடைத்தவற்றை வீசி எறிந்து தனது ஆளுமையை வெளிப்படுத்தியிருந்தன.

# திமிங்கலம் - பழையது





தென்கொரியாவின் குகைகளில் கல்லில் செதுக்கப்பட்டிருந்த திமிங்கிலத்தின் உருவங்கள் மூலம் கி.மு. 6000 ஆண்டுகளில் கற்கால மனிதர்கள் திமிங்கிலத்தை வேட்டை யாடுவதற்குக் கற்றுக் கொண்டார்கள் என்ற உண்மையை விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இவ்வகையான 46 கல்லில் செதுக்கிய திமிங்கிலங்களின் உருவங்களைக் கண்டதாகவும் - மீனவர்கள் கர்ப்பூன் **(HARPOON)** எனப்படும் ஈட்டிகளையும் வலைகளையும் பாவித்ததற்கான சான்றுகளையும் கண்டுள்ளதாகத் தெரிவித்தனர். வள்ளம் ஒன்றின் முன் பலர் கூடி நிற்பது போன்ற சாட்சிகளும் கல்லில் செதுக்கப்பட்டிருந்ததை அவதானித்துள்ளனர். கி.மு. 6000 இற்கும் 1000 இற்கும் இடைப்பட்ட காலத்தில் பாறைகளில் செதுக்கப்பட்ட உருவங்கள் **(PETRO GLYPHS)** பல்வேறு இடங்களில் விஞ்ஞானிகள் அவதானித்தனர்.

அந்தக் காலப் பகுதியில் திமிங்கிலங்களின் எலும்புகளையும் பல இடங்களில் அகழ்ந்தெடுத்துள்ளனர்.

இதன்மூலம் திமிங்கிலத்தை உணவாகப் பாவித்தமையைத் தெரிந்துகொண்டனர். திமிங்கில வேட்டையை சமூகக்கொண்டாட்டமாகவும் நடத்தியாதத் தெரிவித்தனர்.

# நொக்கியா அவுட்



அண்மையில் அமெரிக்காவில் நொக்கியா கையடக்கத் தொலைபேசி திடீரென வெடித்ததிலிருந்து, அத் தொலைபேசியினுடைய சந்தை வாய்ப்புக்கள் திடீரெனப் குறைந்துபோயிருந்தது. இதனைக் கருத்திற்கொண்ட நொக்கியா நிறுவனம் பலதரப்பட்ட மாறுதல்களைச் செய்து வியாபாரத்தை அதிகரிக்கவேண்டும் என்ற நினைவுடன் இருந்தபொழுது, தற்போது அவர்களுடைய பங்குகளில் 10 வீதம் சரிவு ஏற்பட்டிருக்கின்றது. ஏறக்குறைய இது 816 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனக் கூறுப்படுகின்றது. இலங்கை வாழ் மக்கள் கூடுதலாக நொக்கியா கையடக்கத் தொலைபேசியைப் பாவித்தாலும், உலகளாவியரீதியில் பார்த்தால் சாம்சுங் மற்றும் சொனி, எரிக்சன் கையடக்கத் தொலைபேசிகள் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அதிலும், சொனி நிறுவனம் டிஜிட்டல் தொலைபேசிகளையும் சாம்சுங் லப்டப் கணினி அமைப்புக்களையும் கையடக்கத் தொலைபேசிகளில் புகுத்துவதனால், நொக்கியா நிறுவனத்தால் இவற்றுடன் போட்டிபோட முடியாதநிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஆகவே நொக்கியா ஒரு புதிய அதிரடிக் கண்டுபிடிப்புக்காகக் காத்திருக்கிறது.

# முதியோர் துஷ்பிரயோகம்



பிரித்தானியாவில் அணமையில் மேற்கொண்ட ஆய்வுகள் அரை மில்லியன் வரையான முதியவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது. பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வகையான துஷ்பிரயோகங்கள் முதியவர்கள் வாழும் சொந்த வீடுகளில் நடத்தப்பட்டுள்ளதாகவும் - இந்த முதியவர்கள்மீது பாலியல், உடல்ரீதியான துஷ்பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நோய்களுக்கான மருந்துகளை வழங்கும்போது கவனக்குறைவாக நடந்துள்ளமை அறியப்பட்டுள்ளது. சமூகத்தில் முதியவர்கள்மீது நடத்தப்படும் துஷ்பிரயோகங்கள் நன்கு அறியப்படாது காணப்பட்டது. வீடுகளில் மாத்திரமன்றி முதியோர் இல்லங்கள், வைத்தியசாலைகள், தங்கும் விடுதிகளிலும் இவ்வகையான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. பல நோயாளிகளைக் கொலை செய்த கரோல்இட்மேனும் இவ்வகையான முதியோர் துஷ்பிரயோகங்களை மேற்கொண்டிருந்தார்.

# திரை விமர்சனம்

## கில்லி

தெலுங்கில் பெரிய வெற்றி பெற்ற "ஒக்கடு" படத்தின் ரீமேக்தான் கில்லி. தில், தூள் ஆகிய வெற்றிப்படங்களின் இயக்குநர் தரணியின் விஜயுடனான முதல் படம். 'திருமலைக்குப்பிறகு வந்த முதல் ஆக்ஷன் படம் இது. கண்டிப்பான உதவிப் பொலிஸ் கமிஷனர் (ஆஷிஸ் வித்தியார்த்தி) மகனான சரவணன் வேலு (விஜய்) மிகச் சிறந்த கபடி விளையாட்டு வீரன். கபடி என்றாலே பிடிக்காத அப்பாவிடம் பொய் சொல்லிவிட்டு மதுரைக்குக் கபடிப் போட்டிக்காகச் செல்லும் விஜய், அங்கே தனலட்சுமி (திரிஷா)யை அவ் முறைமாமன் துரைப் பாண்டியன் (பிரகாஷ்ராஜ்) இடமிருந்து காப்பாற்றி சென்னைக்குத் தன்னுடன் அழைத்து வருகிறார். துரைபாண்டியனின் அப்பா மந்திரி. அடாவடிச் செயல்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பவன். துரைபாண்டியனின் ரவுடிக்கும்பல் + பொலிஸ் + மந்திரியின் படை சேர்ந்து விஜய் + திரிஷாவைத் துரத்துகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் தேசிய கபடிப்போட்டியில் வேறு கலந்துகொள்ளவேண்டும். இதனை எல்லாம் எவ்வாறு விஜய் எதிர்கொள்கிறார் என்பதுதான் மீதிக்கதை.



ஆனால், கபடிப்போட்டியில் அணித்தலைவர் பிரகாஷ்ராஜ் தாக்குவது மிக அதிகம். காதல் காட்சிகள் மிகக்குறைவு. முற்றுமுழுதாக ஆக்ஷன் காட்சிகளே உள்ளன. தெலுங்கிலும், தமிழிலும் பிரகாஷ்ராஜ் அசத்தியிருக்கிறார். அவர் திரிஷாவிடம் ஐ லவ் யூ சொல்லும் அழகே தனிதான். திரிஷாவின் அப்பாவாக வினோத்ராஜ் (நடிகர் விக்கிரமின் தந்தை). பிரகாஷ்ராஜின் தாயாகப் பாடகி டி.கே.கலாவும் நடித்துள்ளார். வித்தியாசாகரின் இசையில் பாடல்கள் 'ஹிட்ரகம்'. அதிலும் 'அப்படிப்போடு' அசத்திப்போடுகிறது. மணிராஜ் கலை, கோபிநாத் ஒளிப்பதிவு, பரதன் வசனம், வி.டி.விஜயன் படத்தொகுப்பு - இருந்தாலும் கில்லி நகைச்சுவை இல்லை.

- PNS -

# அப்பிள் கணினி

சர்வதேச உலகில் கணினிகள் என்றவுடன் நினைவுக்கு வருவது அப்பிள்கணனிகள்தான். அவை பலதரப்பட்ட வடிவங்களில் வந்துகொண்டிருக்கின்றன. அண்மையில் குறிப்புப் புத்தக வடிவில் வந்த கணினிகள் எல்லோரையும் கவர்ந்திருக்கின்றது. இதில் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் - இதனுடைய மலிவுவிலை. இதன் காரணமாக மிகவேகமாக இந்த வகைக் கணினிகள் விற்றுத் தீர்ந்துவிட்டன. கடந்த மூன்றுமாத காலங்களில் மட்டும் 358,000 அப்பிள் குறிப்புப் புத்தக வடிவக் கணினிகள் விற்றுத் தீர்ந்து இருக்கின்றன. இது வயர்லெஸ் அதாவது, கம்பி இல்லாத் தந்தித் தொழில்நுட்பத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதனுடைய விலை ஏறக்குறைய 1599 அமெரிக்க டொலர் அல்லது 1,149 ஸ்ரேலிங்பவுண் ஆகும். இதில் காணப்படுகின்ற குறைபாடு என்னவென்றால் - மற்றக்கணனிகளுடன் ஒப்பிடுகையில் இவை எளிதில் சூடேறுகின்றன. வயர்லெஸ் தொழில்நுட்பம் காரணமாக இவற்றினைக் குளிர்த்துதல் கடினமாகின்றது. ஆனாலும், இவற்றின் விற்பனையில் எந்தவிதமான சிக்கலும் இல்லை.



# தொடரும் பயணம்



ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரம் இடம் பெயர்வுகளைப் பறவைகள் மேற்கொள்கின்றன. இவை எவ்வாறு, தமது தேர்தெடுக்கப்பட்ட இடங்களை அடைகின்றன என்பது விஞ்ஞானிகளுக்கு இதுவரை புரிந்துகொள்ள முடியாததொன்றாகவே தென்பட்டது. குறிப்பாக ஆயிரக் கணக்கான மைல்கள் சரியாக அடைவது எவ்வாறுறெனக் கண்டு கொண்டுதாகத் தெரிவித்துள்ளனர். பரிசோதனைக் கூடங்களில் மேற்கொண்ட ஆய்வுகளில் சூரிய ஒளியின் திசை, நட்சத்திரங்கள், பூமியின் காந்தப்புலம் ஆகியன திசையை பறவைகள் அறிந்துகொள்வதற்கு உதவியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். மனிதனால் உருவாக்கப்படும் காந்தப்புலன்கள் மத்தியில், பறவைகள் எவவாறு திசையை அறிந்துகொள்கின்றன என்பதை ஆராய்ந்துள்ளனர். இந்தநிலையில் பறவைகள் மிகவும் குழப்பமடைந்து காணப்பட்டதாகவும், செல்லவேண்டிய இடத்தில் திசையை அறிந்து கொள்ளமுடியாது குழப்பமடைந்து காணப்பட்டதாகவும்,



இந்தப் பறவைகளில் ரேடியோச் சமிக்கைகளை வெளிப்படுத்தக்கூடிய உபகரணங்களை உடலில் பொருத்தி, அவற்றை அவை இடம் பெயரும் பாதையில் செல்வதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டிருந்தனர்.

செயற்கைக் காந்தப்புலன்கள் செல்லும் பாதையில் செல்ல முற்பட்டு, தமது பாதையை தவறவிட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

தவறவிட்டிருந்த பாதையைச் சூரிய ஒளியின் திசைமூலம் திருத்திக்கொண்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

# பலவகை புலி இனங்கள்

பல்வேறு வகையான புலி இனங்களை அண்மைக் காலத்தில் நகர்ப் புறங்களில் காணக்கூடியதாக உள்ளதாக பிரித்தானியாவில் புலி இனங்களை அவதானிக்கும் கழகம் ஒன்று தெரிவித்துள்ளது. இந்த இனங்கள் தமது இயற்கைச் சூழலிலிருந்து வெளியேறுவதற்கான காரணங்களை ஆராயவுள்ளனர். புலிகளின் பாதச் சுவடுகளை இயற்கையாக அவை காணப்படாத பிரதேசங்களிலும் அவதானித்துள்ளனர். விவசாயிகள் தமது கால்நடைகள் திடீரென இவற்றினால் தாக்கப்பட்டதை விடியோ படங்கள்மூலம் காண்பித்துள்ளனர். ஆய்வுகளை மேற்கொண்டபோது 96 புலிகள் இவ்வாறு தமது இருப்பிடங்களிலிருந்து நகர்ந்து சென்றதற்னான சான்றுகளை அறிந்துகொண்டனர். இவற்றின் இடப்பெயர்ச்சிக்கான காரணங்களை அறிந்து கொளவதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகள் தற்போது பிரித்தானியாவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# பழைய மாலை





சோகிகளினால் தயாரிக்கப்பட்ட மாலைகளை ஆபிரிக்கா வில் வாழ்ந்த ஆதிமனிதர்கள் உபயோகித்துள்ளனர் என்பதற்கான ஆதாரங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். 75000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் இவற்றை உபயோகித் துள்ளனர்.

குகைகளில் கண்டெடுக்கப்பட்ட சோகிகளில் துவாரங்கள் காணப்பட்டதாகவும், மாலைகளாகப் பாவிப்பதற்காகவே துவாரங்களை உருவாக்கியிருந்தனர் எனவும் தெரிவித்தனர். எமது மூதாதையர்களின் மத்தியிலும் பொருட்களை வடிவமைக்கும் எண்ணங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கின்றனர்.

மிருகங்களின் தோல்களில் உருவாக்கப்பட்ட மெலலிய நூல்களை மாலைகள் உருவாக்குவதற்குப் பாவித்ததாகவும் கண்டுள்ளார்கள். அத்துடன், சோகிகளில் காணப்பட்ட துவாரங்கள் எல்லாம் ஒரே விதமாகவும் அமைக்கப்பட்டிருந்தன.

இவற்றின்மூலம் மாலைகளை உருவாக்குவதற் காகவே இந்தத் துவாரங்களை அமைத்திருந்தார்கள் என்பதையும் அறிந்துகொண்டனர்.

அத்துடன், சோகிகளில் பல பக்கங்களை உரு வாக்குவதற்காக (**Facets**) அவற்றை ஒன்றுடன் ஒன்றை தேய்ந்திருந்ததையும் அவதானித்தனர். அத்துடன், சோகிகளினால் உருவாக்கப்பட்ட மாலைகளில் பல்வேறு வடிவங்கள் காணப்பட்டன.

இதன்மூலம் மாறுபட்ட சமூகங்கள் தமது அடையாளங்களை வெளிப்படுத்துவதற்கு இந்த மாலைகளைப் பாவித்ததாகவும் அறிந்துகொண்டனர்.

# கட்டுப்பாட்டுணவு



இதய நோயின் தாக்கம் உணவில் கட்டுப்பாடு இல்லாதவர்கள் மத்தியில் அதிகரித்துக் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. விற்பனை நிலையங்களில் காணப்படும் பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்த்துக் கொண்டவர்கள் மிகுந்த ஆரோக்கியமுடையவர்களாகவும் காணப்படுகின்றனர். உணவைக் குறைவாக உண்பவர்களிடையே நீரிழிவு நோயும் குறைவாகவே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தத்தில் கொழுப்பின் அளவும் குறைவாகவே காணப்படுகிறது. முதுமைக்கும் மிதமிஞ்சிய உணவுப்பழக்கம் கொணட வர்களிடையேயும் தொடர்புள்ளதெனவும் - எலி, பூனை ஆகிய பிராணிகளிடையே நடத்திய ஆய்வுகளில் நீண்ட ஆயுளுக்கு உணவு ஒரு காரணியாக அமைவதாகக் காணப்படுகின்றது. இரத்தக் குழாய் சுருங்குவதற்கும் இதனால் இதய நோய்கள் உருவாகுவதற்கும் இடையே காணப்படும் தொடர்பினை ஆராய்ந்தபோது - உணவு ஒரு காரணியாக அமைவதாகவும், இரத்தத்திலுள்ள சீனியை கட்டுப்படுத்தும் இன்சுலின் குறைவான கலோரி உணவை உட்கொள்பவர்கள் மத்தியில் அதிகரித்து காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

சர்வதேச அரசியல்

கே. ரி. கணேசலிங்கம்

# ஈராக்கிலிருந்து ஸ்பெயினின் படைவிலகல் உலக அரசியலில் ஏற்படுத்தவுள்ள மாறுதல்கள்

ஈராக்கில் பெருகிவரும் தாக்குதல்களும், தற்கொலைத் தாக்குதல்களும் அமெரிக்கா உட்பட்ட அந்நியப்படைகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது. ஈராக்கிய மக்கள் கொல்லப்படுவதற்கு புறம்பாக காவல் நிலையங்கள், இராணுவத் தளங்கள், உயர் பாதுகாப்புப் பிரதேசங்கள் தற்கொலைத் தாக்குதலுக்கான இலக்குகளாக காணப்படுகின்றன. இதனால், அதிக சேதங்களையும். இழப்பீடுகளையும் அந்நிய நாட்டுப் படைகள் எதிர்கொண்டு வருகின்றன. இந்தச் சூழலில் ஸ்பெயின அரசு தனது படைகளை ஈராக்கிலிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டிருகக்கின்றது. இதேபோல் கொண்டூரஸ் நாட்டுப்படைகளும் ஈராக்கிலிருந்து விலக்கிக் கொள்ளப்படுமென அறிவித்துள்ளது. இதன் அரசியல் விளைவுகளை பரிசீலிப்போம்.

**அமெரிக்காவிடம் போதிய படைபலமும், ஆயுதத் தளபாடமும் இருந்தாலும் ஈராக்கிய மக்கள் தெளிவான கொள்கையுடன் ஐக்கியப்பட்டு போரிடுவார்களாயின் மிகஇலகுவாக அமெரிக்கப்படைகளை விரட்டலாம். இதனை அடைவதற்கு அமெரிக்கப் படைகள் உளவியல் ரீதியில் பாதிப்படைதல் வேண்டும்.**

ஸ்பெயினின் படை வாபஸ் ஜனாதிபதி ஜோஷ்லூயிஸின் தனிப்பட்ட நடவடிக்கை என்று மட்டும் கருதிவிட முடியாது. ஆனால், தேர்தல் வாக்குறுதியைக் காப்பாற்றிய முதல் ஜனாதிபதி என்ற கௌரவத்தை லூயிஸ் பெற்றிருக்கிறார் என்பதே கவனிக்கப்பட வேண்டிய விடயம். இது ஸ்பெயின் நாட்டுக்கு கிடைத்த அதிஸ்ரமாகக்கூட அமையலாம். ஆனால், ஸ்பெயின் ஈராக்கிலிருந்து படைகளை வாபஸ்பெற தீர்மானித்த விடயம் அமெரிக்காவின் அரசியல், இராணுவ இலக்குகளை மட்டுமன்றி பொருளாதார நலனையும் பாதித்துவிட்டதென்றே விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அதனால் அமெரிக்கா உடனடியாக படையை வாபஸ் பெறுவதோ, சரணடைவதோ அல்ல மிக நீண்ட காலத்திற்கு திட்டமிட்ட அமெரிக்க நலன் படிப்படியாக நகரத் தொடங்கிவிட்டது. அதனை சற்று விரிவாக நோக்குவோம்.

முதலில் ஸ்பெயின் நாட்டில் நடந்த தேர்தலுக்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட ரயில் குண்டு வெடிப்பிலான தாக்குதலை நோக்குவோம். இதற்கு இஸ்லாமிய தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றதுடன் இதனை நிறுத்த வேண்டுமாயின் இஸ்லாமியர் மீது தாக்குதலை நிறுத்த வேண்டுமென பின்லாடன்



ஒலி நாடாவில் தெரிவித்திருந்தார். அதாவது ஸ்பெயின் தாக்குதலுக்கும் ஈராக்கிலிருந்து ஸ்பெயின் படைகளை விலக்கிக் கொள்வதற்கும் இடையில் அதிக தொடர்புண்டு எனலாம். ஸ்பெயின் மீதான அடுத்த தாக்குதலும் ஒரு வாரத்தில் இஸ்லாமிய தீவிரவாதத்தால் நிகழ்த்தப்பட்டது.

அதாவது ரயில் மீதான குண்டுத் தாக்குதலுக்கு பின்னர் அப்போது எதிர்க்கட்சி வேட்பாளரான லூயிஸ் தேர்தல் வெற்றிக்காக வாக்குறுதியை அளித்தார் என்பதைவிட நிலைமையையும், அக்காலப்பகுதி அரசியல் சூழலையும் நன்கு புரிந்து கொண்டு வெற்றியை பெற்றுள்ளார் எனக் கூறலாம். அதனால் இஸ்லாமியத் தீவிரவாதம் ஸ்பெயினில் வெற்றிபெற்றுவிட்டது. இந்த வெற்றி எல்லையற்ற திருப்பம் உலக நாடுகள் மத்தியில் நிகழ வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாவது இஸ்லாமியத் தீவிரவாதம் ஸ்பெயினைப்போன்று ஏனைய நாடுகளிலும் தாக்குதலை ஒரு யுத்தியாகப் பயன்படுத்தலாம். அவ்வாறு பயன்படுத்துமாயின் ஸ்பெயினைப் போன்று நிகழ்வுகள் சாத்தியப்படுமாயின் அமெரிக்கா கூறும் பயங்கரவாதம் வெற்றிபெறும். பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற போலி - முகத்தை ஸ்பெயின் உடைத்ததன் மூலம் அமெரிக்கா கூறிவந்தது பயங்கரவாதமா? அல்லது அமெரிக்காவே பயங்கரவாதமா? என்ற சர்ச்சை கிளம்பும். ஸ்பெயினின் முடிவு இஸ்லாமிய தீவிரவாதத்தின் தாக்குதலை அதிகரிப்பதுடன் ஐரோப்பிய நாடுகளில் அதிக பாதிப்பையும் நெருக்கடியையும் உருவாக்கும்.

மூன்றாவது ஸ்பெயினைத் தொடர்ந்து கொண்டுஸ்ரம் தனது படைகளை விலக்கப்போவதாக அறிவித்துவிட்டது. இது மேலும் பரவ வாய்ப்பு ஏற்படும். அவுஸ்ரேலியா தனது படைகளை 2005 ஆம் ஆண்டு வரையும் விலக்கிக் கொள்ளாது என அறிவித்தபோதும் ஆட்சிமாற்றம், மக்கள் நெருக்கடி அதிகரிக்குமாயின் தவிர்க்க முடியாத நிலை ஏற்படலாம். இதனால் அமெரிக்கப்படைகள் தனித்து ஈராக்கில் தாக்குப்பிடிக்குமா என்ற கேள்வியை எழுப்பும்.

ஆனால், அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் ஜோன் ஹெரி நேட்டோ (NATO) படைகளை அமெரிக்கா ஈராக்கில் நிறுத்த வேண்டுமெனவும் அதனால் தற்போது எழுந்தமாதிரி நெருக்கடி ஏற்படாது எனவும் கூறியுள்ளார். எனவே ஆக்கிரமிப்பு நடவடிக்கை தொடரவே திட்டமிடல் நிகழுகின்றது. ஆனால் நேட்டோவே நெருக்கடியாக மாறுமாயின் அமெரிக்க பலமும், ஆதிக்கமும் ஜோன் ஹெரிக்கு புலனாகும்.

நான்காவது படை வாபஸ் நிகழ்வு அமெரிக்க இராணுவத்தின் உளவியல் பலத்தை நிச்சயமாக பாதிக்கும். இதனால் போரிடும் பலம் படிப்படியாக குறைந்து இறுதியில் அமெரிக்கப்படைகள் அபாயமான நிலைக்குள் தள்ளப்படலாம். எந்தப் போர் வீரனுக்கும் மனோவியல் பலம் முக்கியமானது. அழிவுகள், பாதிப்புக்கள் நிகழும்போது போதிய ஆயுதம் இருப்பதுபோல் போதிய படையணியும் இருக்கவேண்டும். தாக்குதல் நிகழும் படையணியை உடனுக்குடன் இடம்மாற்றுவதும், அதிக இழப்பீடுகளை சந்திக்கும் போது புதிய படையணியை குவிப்பதும் இராணுவத்தின் உத்தியாக விளங்குகின்றமை அமெரிக்கப்படைகளுக்கும் பொருந்தும். இதன் பாதிப்புக்களால் பின்னடைவு, தவிர்க்கமுடியாத அம்சமாகும்.

அமெரிக்காவிடம் போதிய படைபலமும், ஆயுதத் தளபாடமும் இருந்தாலும் ஈராக்கிய மக்கள் தெளிவான கொள்கையுடன் ஐக்கியப்பட்டு போரிடுவார்களாயின் மிக இலகுவாக அமெரிக்கப்படைகளை விரட்டலாம். இதனை அடைவதற்கு அமெரிக்கப்படைதல் வேண்டும். கடந்த ஒரு மாதகால அமெரிக்கப் படைகள் பிரிட்டிஷ் படைகள் தாம் ஆதிக்கம் செலுத்திய பல நகரங்களை இழக்கத் தொடங்கியுள்ளனர். இதற்கு இஸலாமிய தீவிரவாதப் பிரிவுகளின் தாக்குதலும் மக்களது ஒருமித்த போர் நடவடிக்கையுமே காரணமாகும்.

அடுத்து, ஸ்பெயினின் படை வாபஸினால் அமெரிக்க ஜனாதிபதி அதிக பாதிப்பை அடைய வாய்ப்பு உண்டு. வில்லியம் புஷ் தோற்கடிக்கப்படுவது 69 வீதமாக உயர்ந்துள்ளது. அதாவது இஸ்லாமிய தீவிரவாதத்தின் தாக்குதல் ஸ்பெயினில் மட்டுமல்ல ஆட்சியை மாற்றியது அமெரிக்காவிலும், மாற்ற உதவவுள்ளது. நிச்சயமாக புஷ்ஷிக்கு எதிரான போராட்டங்கள் உணர்வலைகள் அதிகரித்த வண்ணமுள்ளன. இது அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் பிரதிபலிக்கும்.

இறுதியாக அமெரிக்க வல்லரசின் கட்டுப்பாட்டை தகர்த்த அரசாக ஸ்பெயின் விளங்கியுள்ளது. இது அமெரிக்காவின் சர்வதேச அதிகாரப்பலத்தை பாதிப்பதுடன் அமெரிக்க கட்டளையை எதிர்க்கும் உணர்வு பல அரசுகளுக்கு எதிர்காலத்தில் ஏற்படலாம். குறிப்பாக ஸ்பெயின் படைகளை வாபஸ் பெறப்போவதாக அறிவித்த மறுகணம் புஷ் உடனான சந்திப்பை ஜோர்தான் மன்னர் ஒத்திவைக்க திட்டமிடுகின்றார். எனவே, அமெரிக்கா தனிவல்லரசு என்ற போக்கு ஐரோப்பாவுக்குள்ளும் தகரும் நிலையை அண்மித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றிய அரசியலமைப்பைப் பற்றிய வாக்கெடுப்புக்கு தயாராகி வருகிறது. அதனால், பிரிட்டன் யுரோலாந்திலும், அதன் பொருளாதார, நாணயச் சந்தையிலும், சேருமாயின் அமெரிக்காவின் நிலை ஆபத்தான கட்டத்தை நோக்கி நகரும்.

எனவே, ஸ்பெயினின் படை விலகல் பல அரசியல் மாற்றங்களை உலகத்தில் ஏற்படுத்தும். அதிலும் அதிக பாதிப்பை நேரடியாக சந்திக்கும் அரசு அமெரிக்காவேயாகும். ❑

செய்திக் கட்டுரை

செ. சுதாகரன்

# தொடரும் சட்ட விரோதச் செயல்கள் மக்களிடம் விழிப்புணர்வு வேண்டும்

"சட்டவிரோதமாக மணல் ஏற்றிய உழவு இயந்திரங்கள் தடுத்து வைப்பு", "சட்டவிரோத கருக்கலைப்பு அதிகரிப்பு", "சட்டவிரோத மதுபான விற்பனை நிலையம் கண்டுபிடிப்பு" போன்ற செய்திகள் அண்மைக்காலமாகத் தினசரிகளில் தினசரி இடம்பெறும் செய்திகளாக மாறிவிட்டன.

இச்செயல்கள் சட்டப்படி பிழை எனத் தெரிந்தும் - சட்டத்தின் பிடியில் அகப்பட்டுத் தண்டனை பெற்ற பின்பும் கூட அதே செயலை மீளவும் செய்யும் மனோபாவம் இம்மக்களுக்கு எதனால் வந்தது? ஏன் இப்படிச் செய்கிறார்கள்? ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்ற வேறுபாடின்றி சட்டவிரோத மண்ணகழ்வு மற்றும் சட்டவிரோத மது (கசிப்பு) உற்பத்தி, விற்பனை, பயன்பாடு என்பவற்றில் ஈடுபடுகின்றமைதான் வேதனையான விடயம். இவ்வாறான செயல்கள் ஏன் இடம் பெறுகின்றன என ஒவ்வொரு செயலிலும் குறுகிய காலஇடைவெளியில் பெருந்தொகைப் பணம் சம்பாதிக்கும் குறுக்கு எண்ணமே காரணம் என்பது வெளிப்படையாகத் தெரியவரும்.

முதலில் சட்டவிரோத மண்ணகழ்வு பற்றிப் பார்ப்போம். இம்மண்ணகழ்வு பெரும்பாலும் இரவு வேளைகளில் இடம்பெறுகின்றது. கட்டடத் தேவைக்கு எந்த விதத்திலும் பிரயோசனமற்ற உவர் மண் இவ்வாறு களவாக ஏற்றப்பட்டு தூர இடங்களுக்கு எடுத்துச் சென்று பெருந்தொகைப் பணத்திற்கு விற்கப்படுகின்றது.

எவ்வித அனுமதியும் பெறப்படாமல், எவ்வித கட்டணமும் செலுத்தாமல் ஏற்றப்படும் இம்மண்ணை இவ்வாறு களவாக கொண்டு சென்று விற்பதன் மூலம் பெருந்தொகைப் பணம் இலாபமாகப் பெறப்படுகின்றது. இதனால் தான் இடையில் பொலிஸாரிடம் சிக்கினாலும் ஏதோ ஒருவகையில் தப்பிச் செல்லவும், கட்டடப் பணியில் ஈடுபடும் மேசன் தொழிலாளிக்கு இலஞ்சம் கொடுத்து குறித்த மண்ணின் தரம் பற்றிப் புகார் செய்யாமலிருக்க வைக்கவும், புதிதாக குறுகிய காலத்துள் வீடு, காணி, வாகனம், நகை என வாங்கிச் செல்வந்தராக மாறவும் முடிகின்றது.

இதேபோலத்தான், சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் வெறுமனே உள்ளூரில் கிடைக்கின்ற மலிவான கழிவு மூலபொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் கசிப்பு குறைந்த விலையில் விற்றாலும் கூட பெருமளவு பணம் இலாபமாகப் பெறமுடிகின்றது. இக்கசிப்பு உற்பத்தி, விற்பனை மூலம் பெருந்தொகைப் பணம் ஈட்டி பெருஞ்செல்வந்தரான பலர் இன்று எம் நாட்டில் உள்ளனர். பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டால்,ஏதாவது ஒரு வழியில் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி தப்பவும், இல்லையேல் நீதிமன்று விதிக்கும் பெருந்தொகைப

***சட்டப்படி பிழை எனத் தெரிந் தும் – சட்டத்தின் பிடியில் அகப்பட்டுத் தண் டனை பெற்ற பின்பும் கூட அதே செயலை மீளவும் செய்யும் மனோபாவம் இம்மக்களுக்கு எதனால் வந்தது? ஏன் இப்படிச் செய்கிறார் கள்? ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்ற வேறு பாடின்றி சட்டவிரோத மண்ணகழ்வு மற்றும் சட்டவிரோத மது (கசிப்பு) உற்பத்தி, விற்பனை, பயன்பாடு என்பவற்றில் ஈடுபடுகின்றமைதான் வேதனையான விடயம்.***

பணத்தை அபராதமாகச் செலுத்தி விடுதலையாகவும் முடிகின்றது.

இவ்வாறு இலஞ்சமாகவும், குற்றப்பணமாகவும் செலுத்தப்படும் பணத்தை அடுத்த ஓரிரு நாட்களில் மீளவும் சம்பாதிக்கவும் முடிகின்றது. இக்கசிப்பினால் ஏற்படும் தீங்கினை அதனை உற்பத்தி செய்பவர்களோ அன்றி விற்பனை செய்பவர்களோ அன்றி அருந்துபவர்களோ அறியாமலில்லை. பெருமளவு லாபம் கிடைக்கிறதே என உற்பத்தி செய்வோரும், விற்பனை செய்வோரும் நினைக்க குறைந்த செலவில் நிறைந்த போதை கிடைக்கின்றதே என அருந்துபவர்களும் நினைப்பதுதான் இதனை நிறுத்த முடியாததற்குக் காரணம் கசிப்பு அருந்துபவர்கள் உள்ளவரை நாங்கள் அதனை உற்பத்தி செய்வோமென உற்பத்தியாளரும், உற்பத்தி இருக்கும் வரை நாம் அதனை அருந்துவோம் எனப் பாவனையாளர்களும் நினைத்துச் செயற்படும்வரை இதனை நிறுத்தவே முடியாது.

'திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாது' என்பதைப் போல கசிப்பு உற்பத்தியாளர், விற்பனையாளர், பாவனையாளர் அனைவரும் உணர்ந்து திருந்தினால் ஒழிய இதனை அழிக்கவே முடியாது.

அடுத்து இடம்பெறும் ஒரு சட்டவிரோத செயல் கருக்கலைப்பு. அண்மையில் ஒரு பத்திரிகையில் செய்தி ஒன்று வெளியானது. அதில் சட்டவிரோத கருக்கலைப்பு செய்யும் பெண்கள் தொகை யாழ். குடாநாட்டில் அதிகரித்து இருப்பதாகவும், இவ்வாறு சட்டவிரோதமாக கருக்கலைப்பு செய்பவர்களில் அரைவாசிப்பேர் திருமணமாகாத இளம் பெண்கள் எனவும் தெரிவிக்கின்றது. நிலைமை எங்கே செல்கின்றது எனப் பார்த்தீர்களா? எமது நாட்டில் கருக்கலைப்புச் செய்வது குற்றம். அக்கருவில் குழந்தையினால் தாயின் உயிருக்கு ஆபத்து என மருத்துவர்கள் கருதினால் மட்டுமே அதுவும் ஒரு மருத்துவமனையில் வைத்தே இக்கருக்கலைப்பினைச் செய்யமுடியும். ஆனால் இன்று இங்கு இடம்பெறும் தவறான பாலியல் தொடர்புகளால் உண்டாகின்ற கருவினைப் போதிய அறிவற்ற கிராமிய மருத்துவத் தாதிமார்களைக் கொண்டு சட்டவிரோதமாகக் கலைக்க முற்பட்டு அதீத இரத்தப் பெருக்கினால் இறப்பினையும் தழுவிக் கொள்கின்றார்கள். திருமணமான பெண்களைப் பொறுத்தளவில் வேண்டாத கர்ப்பத்தைத் தடுப்பதற்கு இன்று எத்தனையோ விதமான கருத்தடை முறைகள் உள்ளன. அவற்றில் ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம் கருக்கலைப்பை மேற்கொள்ளாது தடுக்கலாம். ஆனால், திருமணமாகாத இளம்பெண்கள் நமது கலாசார விழுமியங்களைப் பேணி ஒழுக்கமாக வாழ்ந்தால் இந்நிலை ஏற்படுவதைத் தடுக்கலாம்.

பொதுவாக இச்சட்டவிரோதச் செயல்கள் பற்றிய போதிய விழிப்புணர்வினைப் பொதுமக்கள் இளஞ் சமுகத்தினிடையே ஏற்படுத்த வேண்டும். இதன் மூலந்தான் இத்தகைய செயற்பாடுகளை ஓரளவுக்கேனும் குறைத்துக் கொள்ளமுடியும். பொது அமைப்புக்கள் முன்வந்து இப்பணியைச் செய்யவேண்டும். செய்வார்களா?

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்*
*நீள்வினையான் நீளும் குடி.*

திருக்குறள்

# நமது நோக்கு

## நோர்வேக்கான ஜனாதிபதியின் அழைப்பும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடும்...

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றினை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அனுசரணையாளர் என்ற வகையில் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா திடீரென விடுத்துள்ள அழைப்பினை அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியிலான நாகரீகத்துடன் நோர்வே அரசு வரவேற்று ஏற்றுக்கொண்ட அதேவேளை, இதே போன்றதோர் அழைப்பானது பேச்சுவார்த்தைகளின் சம பங்காளிகளான விடுதலைப் புலிகளிடமிருந்து கிடைத்தால், சமாதான ஏற்பாட்டாளராக தமது பணியைத் தொடர்வது குறித்த செயற்பாடுகளில் ஈடுபடமுடியுமென்று அறிவித்துள்ளதையடுத்து விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அது தொடர்பாக பரிசீலனை செய்துவருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஐ.தே.முன்னணி அரசு கலைக்கப்பட்டு புதிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டபோதே புதிய அரசு எதுவாக இருந்தாலும் அந்த அரசு உறுதியான முடிவுகளை எடுக்கக் கூடிய வலிமையான ஒன்றாக இருக்குமேயானால் அந்த அரசுடன் பேச்சுக்களைத் தொடரமுடியுமென விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர்.

இப்போது தேர்தல் முடிந்து இன்னமும் அறுதிப் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க இயலாத எந்த வேளையிலும் கவிழ்ந்துவிடக்கூடிய நிலையிலுள்ள தொங்கு நாடாளுமன்றம் ஒன்றே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள நிலையில் - அந்த பலவீனமான அரசின் தலைவியான ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முதல் அடியை எடுத்து வைத்துள்ளார்.

கடந்த ஐ.தே.முன்னணி ஆட்சிக்காலத்தில் அறுதிப் பெரும்பான்மை பலத்துடன் ஒரு அரசாங்கத்தை ரணில் விக்கிரமசிங்க அமைத்திருந்தாலும் கூட, அதிகார பலமற்ற, சுயாதீனமான தீர்மானங்கள் எதுவும் எடுக்கும் வலுவற்ற ஆட்சியையே அவரால் நடத்தமுடிந்தது.

அப்போது சமாதான முயற்சிகள் தொடர்பாக சில ஆக்கபூர்வமான முதல் நடவடிக்கைகளை - விரும்பியோ விரும்பாமலோ எடுத்தேயாக வேண்டும் என்ற நிலையில் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டபோது அதற்கான ஆதரவு அதிகார பலம் கொண்ட ஜனாதிபதியிடமிருந்து எந்த வகையிலும் முழுமையாக கிடைக்காத நிலையில் சமாதான முன்னெடுப்புக்களை உறுதியாகத் தொடர்வதென்பது சர்வதேச சமூகத்தின் ஆதரவுப் பின்புலத்திற்கு மத்தியிலும் சாத்தியமற்றதொன்றாகவே இருந்தது.

அந்த பேச்சுவார்த்தை முயற்சிகள் ஒரு தேக்க நிலைமையை எட்டுவதற்கு ஏனைய பல காரணிகளுடன் இலங்கையின் அப்போதைய 'இரட்டை ஆட்சி' சிக்கல் நிலையும் ஒரு பிரதான காரணியாக இருந்தது என்றால் அது மிகையில்லை.

என்னதான் சமாதானத்தை தான் விரும்புவதாக சந்திரிகா அறிவித்துக் கொண்டே இருந்தாலும் ஒரு காலத்தில் சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு எதிராக கொடிய போரொன்றை நடத்தியவர் அவர் என்பதை எவருமே இலகுவில் மறந்துவிட மாட்டார்கள்.

கடந்த சமாதானப் பேச்சுக்கள் முட்டுக்கட்டை நிலையை எட்டியபின்னரும், புலிகள் போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாடுகளை கடைப்பிடிப்பதில் மிகவும் இறுக்கமாக இருந்ததுடன், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்றுக்கான திட்டவரைபொன்றை அரசிடம் கையளித்து அதன் அடிப்படையில் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சூழலை ஆரம்பித்தவுடன்தான் ரணிலின் ஆட்சியை சந்திரிகா ஏற்றுக்கொள்ளமுடியாத ஜனநாயக விரோதமான பொய்க் காரணங்களைக் கூறி கலைத்தார் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அந்த ஆட்சிக்கலைப்பு நடவடிக்கை சந்திரிகாவின் சமாதான எதிர்ப்பு முனைப்பின் வெளிப்பாடுதான் என்பதில் ஐயமில்லை.

ஆட்சிக்கலைப்பு நடந்தவேளையில், சமாதான எதிர்ப்பு பேரினவாத சக்திகளின் ஏகோபித்த பாராட்டையும், ஆதரவையும் பெற்றதுடன் சந்திரிகாவுடன் ஏனையோரும் சேர்ந்து நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர் பணியின் தன்மையைக் கடுமையாகவும், எதிர்ப்புணர்வு வெறியுடனும் விமர்சித்து, அபாண்டமான குற்றங்களையும் சுமத்தினர் என்பதும் தெரிந்த விடயமே.

இப்போது இந்த சமாதான விரோத, நோர்வே எதிர்ப்பு அணியே தேர்தலில் வெற்றிபெற்று பலவீனமான அரசொன்றை அமைத்துள்ள நிலையில் மீண்டும் நோர்வேயை அனுசரணையாளராகப் பணியாற்ற அழைத்துள்ளனர்.

எனவேதான் இந்த சமாதானத்திற்கான சந்திரிகாவின் திடீர் அழைப்பின், ஆழ மூலங்களின் பரிமாணங்கள் அனைத்தையும் முழுமையாக ஆராயாமல் முடிவெடுப்பது ஆபத்தாக இருக்குமென நோக்கர்கள் கருதுகின்றனர்.

எதுவானாலும் பேச்சுக்கள் மீண்டும் 'அ'னாவிலிருந்து தொடர்வதென்பது அர்த்தமற்றதேயாகும்.

விட்ட இடத்திலிருந்து தொடங்குவதென்றாலும், புதிய அரசு குறித்த, அதிலுள்ள அரசியல்வாதிகள் குறித்த, அதன் கூட்டணிக் கட்சிகள் குறித்த கடந்த கால பட்டறிவு அனுபவங்களின் அடிப்படையில் தெளிவானதும், உறுதியானதுமான வரையறைகளை வகுத்துக்கொண்டே பேசுதல் வேண்டும் என்பதும் அவசியமாகும்.

விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடமும், தேசியத் தலைவரின் ஆலோசனையுடன் இது குறித்து தீர்க்கமான முடிவு எடுக்கும் என்பதே தமிழ் மக்களின் நம்பிக்கையும், எதிர்பார்ப்பும்.

# நாடும் நடப்பும்

செய்தி - ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் சமாதானம் குறித்த வேறுவேறு பார்வைகளைக் கொண்டிருப்பதால், பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் குறித்து சர்வதேசம் கவலை கொண்டுள்ளது.



## மே தினத்தைக் கொண்டாட வெளிநாடுகளிலும் ஏற்பாடு!

(கொழும்பு)

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வழியில் ஒன்றிணைந்து தமிழ்த்தேசியத்தை வலுப்படுத்தும் நோக்கமாக மேதினத்தை கடைப்பிடிக்க தமிழீழப் பகுதிகளிலும் மற்றும் புலம்பெயர் நாடுகளிலும் மக்கள் தயாராகி வருகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகளைத் தமிழ் தேசிய கூட்டமைப்பினரும், நோர்வே, சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழ் மக்களும் எடுத்து வருகின்றனர்.

தாயகரீதியாக தாயகம், சுயநிர்ணயம் ஆகிய விடயங்களை வலியுறுத்தும் வகையிலும், தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை உடன்கையளிக்கவேண்மெனவும்,

சமாதானப் பேச்சுக்கள் துரிதமாக ஆரம்பிக்கப்படவேண்டுமென்ற அம்சங்களை உள்ளடக்கிய மே நாள் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பயிற்சிநெறிக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்காவிலுள்ள தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நிறுவகத்தில் - விஞ்ஞான டிப்ளோமா 4 வருட பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்பு பயிலுநர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் - தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் கோரப்பட்டுள்ளது.

க.பொ.த உயர்தர பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்த 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் 6-6-2004 இற்கு முன்னர் அனுப்பப்படவேண்டும்.

இதுதொடர்பான விபரங்களையும், விண்ணப்பப்படிவத்தையும் - இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## நெடுந்தீவில் தொட்டிமுலம் நீர் வழங்குவோருக்கான கூட்டம் கடந்த வியாழன் இடம்பெற்றது!

நெடுந்தீவுப் பகுதியில் தொட்டிமூலம் நீர் வழங்குவதற்கான கூட்டம் கடந்த வியாழன் நெடுந்தீவு பிரதேசசபை செயலாளர் தலைமையில் பிரதேச மண்டபத்தில் இடம் பெற்றது.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு அமைவாக, ஒவ்வொரு நீர்த் தொட்டியின் பாவனையாளர்களை ஒன்றிணைத்து பாவனையாளர் சங்கங்களை அமைத்து அதன்மூலம் நீர் விநியோகத்தை மேற்கொள்ளவேண்டும் எனவும், இதன் காரணமாக நீர் வீண் விரயமாவதை தடுக்கமுடியுமெனவும் ஆலோசிக்கப்பட்டதுடன் அடுத்த வாரமளவில் இந்தச் சங்கங்கள் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர், தமிழீழ விடுதலைப் புலிகளின் நெடுந்தீவுப் பகுதி பொறுப்பாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் நீர்த் தொட்டி பராமரிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(113)

## செப்பனிடப்படாத கிடங்குகளால் போக்குவரத்தில் ஆபத்துக்கள்

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் ரெலிக்கொம் தொடர்பு திணைக்களத்தினால், நிலத்தடி கேபிள் அமைப்பதற்காக வெட்டப்பட்ட வாய்க்கால்கள் இன்னும் தார் ஊற்றி செப்பனிடப்படாது உள்ளது.

யாழ்ப்பாணம் தட்டாதெரு சந்தியிலிருந்து வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம் வரையான சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரமும், கஸ்தூரியார் வீதியில் வின்ஸர் தியேட்டர் வரையுமுள்ள பாரிய வெட்டுக்கிடங்குகளால் விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன.

காங்கேசன்துறை வீதியில் கில்னர் மண்டபத்திற்கு முன்னால் பாரிய கிடங்கு உள்ளது. இதை விலத்துவதற்காக வாகன சாரதிகள் திடீரென திருப்புவதால், பின்னால் வரும் வாகனங்கள் மோதவேண்டியுள்ளது. இந்தவிடத்தில் பிரபல பாடசாலை ஒன்று உள்ளதால், மாணவர் நெரிசலாக செல்லும்போது சைக்கிளில் சறுக்கிவிழுவது அன்றாடம் நிகழ்கின்றது. மிகப்பிரதான பாதையை உரிய திணைக்களத்தினர் கவனிப்பாரின்றி பாராமுகமாக இருப்பதையிட்டு மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர்.

(101)

## குமுதினிப்படகு சேவை இன்னும் 15 நாட்களுக்குள் இடம்பெறும்

வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான பயணிகள் போக்குவரத்துக்கென ஈடுபட்டுவந்த குமுதினிப் படகின் திருத்தவேலைகள் துரிதகதியில் இடம்பெற்றுவருவதாகத் தெரியவருகின்றது.

படகின் அடிப்பாகத்திற்குப் பாதுகாப்பான தகடு பொருத்தும் வேலையும், இன்னும் சிறுசிறு வேலைகளுமே செய்யவேண்டியுள்ளதாகவும், 75 வீதமான வேலைகள் முடிந்துள்ளதாகவும் தெரியவருகிறது. இன்னும் 15 நாட்களுக்குள் குமுதினிப் படகு மீண்டும் சேவையில் ஈடுபடும் எனவும் அண்மையில் யாழ். அரசஅதிபருடன் நெடுந்தீவுக்கு வந்திருந்த அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபருக்கு நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் - மக்களின் தேவைகளில் கடற்போக்குவரத்து சேவை, குமுதினிப்படகு திருத்தம் போன்றவை அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(113)

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை - மாதிரி வினாத்தாள்

## தமிழ் - II

## மூன்று மணித்தியாலம்

முதலாம் பகுதியில் உள்ள மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் மூன்றாம் பகுதியில் இருந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவேனும் உள்ளிட்டு மூன்று வினாக் களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

01. கீழ்வருவனவற்றில் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவுசெய்து 350 - 400 சொற்கள் கொண்ட கட்டுரை வரைக.
   1) பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் தமிழ்ப் பணிகள்.
   2) நாட்டார் இலக்கியங்கள்.
   3) தமிழில் மொழிபெயர்ப்பு முயற்சிகள்
   4) சமூக சீர்திருத்த பணியில் நாடகம்.
   5) இலக்கியமும் வாழ்க்கையும்.
   6) பணியுமாம் என்றும் பெருமை.

02. பின்வரும் (அ) உரைப் பகுதியையும் (ஆ) செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) உடல் நலம் பெற்றுக்கொள்வதற்கும் அந்த நலத்தினைப் பேணிக் கொள்வதற்கும் உழைப்பு அவசியமானதாகும். கையாளப்படாத பொருள் பண்டங்களும் பயன்படுத்தப்படாத பொறி வகைகளும் நாளடைவில் பாழ்பட்டு உதவாமற்போவது போல உழைப்பில்லாத உடலும் படிப்படியாக நலங்குன்றி பலவகை நோய்களுக்கும் நிலைக்களமாய்விடும். உடல் நலத்திற்கு அவசியமான வகைகளுக்குள்ளே உடற்பயிற்சியே சிறந்ததாகும்.

1) இந்தப் பகுதியில் ஆசிரியர் கூறவந்த முக்கிய கருத்து யாது?
2) அதனை வலியுறுத்த ஆசிரியர் கையாண்டுள்ள உவமைகளை எடுத்து விளக்குக.
3) இந்தப் பகுதியில் ஆசிரியர் கூறியவற்றை 15 சொற்களுக்கு மேற்படாமல் சுருக்கி எழுதுக.

ஆ) அறிவுடையாரன்றி யது பெறார் தம்பால்
செறி பழியை யஞ்சார் சிறிதும் - பிறைநுதலால்
வண்ணஞ் செய் வான் விழியே யன்றி - மறை குருட்டுக்
கண்ணஞ்சு மேலிருளைக் கண்டு.

1) இந்தச் செய்யுளில் ஆசிரியர் பொதித்து வைத்துள்ள கருத்தை ஏறத்தாள 35 சொற்களில் தருக.
2) இந்தச் செய்யுளில் இடம்பெறும் உவமைகள் இரண்டினை எடுத்துக் காட்டுக.
3) இந்தச் செய்யுளில் இடம்பெறும் வினைத்தொகைகள் இரண்டினை எடுத்துக் காட்டுக.

03. (அ) (ஆ) (இ) (ஈ) பகுதிகளில் உள்ள வினாக்களில் எவையேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

(அ) 1) அப்பா, வெட்கம் இவற்றுள் உடனிலையாக மட்டும் வந்தது எது?
2) அவர், கடர், குடர், பிறர், பந்தர் இவற்றுள் மொழியிறுதிப் போலிகள் எவை.
3) வட்டக் கண் ணழகி யலடானே யென்றேன். இதனைச் சந்தி பிரிக்குக
4) தர்மம் வெல்லும் அதர்மம் அழியும் இவற்றுள் குறைந்தொலிக்கும் மகரம் யாது? காரணம் தருக.
5) றபர், ரவி இவற்றுள் முதனிலையாக இகரம் சேர்ப்பின் பொருள் மாறுபடும் சொல் எது?

(ஆ) 6) பனையால் விழுந்தான், கத்தியால் குத்தினான் இவற்றுள் அன் விகுதி பெறத்தக்க சொற்களை விகுதி சேர்த்துக் காட்டுக.
7) பெருமை, பசுமை, கருமை, எருமை, பொறுமை இவற்றுள் அன் விகுதி பெறத்தக்க சொற்களை விகுதி சேர்த்துக் காட்டுக.
8) தொழ, வா, உண், சா இவற்றுள் விகுதி என்பவற்றுடன் புணரும்போது விகாரப்படாத பகுதிகள் யாவை?
9) மீன் விழுங்கியவன், மீன் போன்றவன், மீன் கண்டவன் இவற்றுள் செய்வினைக்கும் செயற்பாட்டு வினைக்கும் பொதுவானவை எவை?
10) உண்டான், உண்டிலன் இவற்றிலுள்ள வேறுபாடு யாது?

இ) 11) உம், என, என்று, ஏ, போல, மற்று இவற்றுள் ஒரு பொருள் குறித்த இடைச்சொற்கள் எவை?
12) களவெடுத்தாலும் பொய்சொல்லாதே இங்கு 'உம்' இடைச்சொல் எப்பொருளில் வந்துள்ளது?
13) பலாப்பழம், பலாவிலை, பனைமரம் இவற்றுள் இருபெயரொட்டு பண்புத் தொகை யாது?
14) யாழ்ப்பாணத்திற் பாரிய மணமகன் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இவ்வாக்கியத்தின் பொருள் மயக்கத்தை சுட்டிக்காட்டி மயக்கமற்றதாக திருத்தியெழுதுக.
15) இங்கு வழிகாட்டல் வகுப்புக்கள் நடைபெறுகிறது. இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வழுவைச் சுட்டிக்காட்டித் திருத்துக.

### பகுதி II

01. அ) சங்ககாலத்து புறத்திணை மரபுதழுவிய இலக்கியங்களைத் தருக?
ஆ) சங்ககாலத்து அகத்திணை மரபு பல்லவர் கால இலக்கியங்களில் படிந்திருக்குமாற்றினை தெளிவுபடுத்துக.

02. அ) சோழர்கால இலக்கியங்கள் எவ்வெவ் வகையில் எழுச்சிபெற்றிருக்கின்றன?
ஆ) சோழர் காலம் ஓர் பொற்காலம் என்பதற்கான காரணங்களை தெளிவுபடுத்துக?

03. அ) நவீனகால கவிதை இலக்கியத்தின் பண்புகளைத் தருக.
ஆ) இப்பண்பு பாரதி பாடல்களில் செறிந்திருக்கும் பாங்கினைத் தெளிவுபடுத்துக.

### பகுதி III

01. அ) கி.பி. 17 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் எழுந்த ஈழத்து இலக்கியங்களை வகைப்படுத்தித் தருக.
ஆ) அவற்றின் பண்புகளை சுருக்கமாக தெளிவுபடுத்துக.

02. அ) 19 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் உரைநடை இலக்கியம் பெற்ற வளர்ச்சியினை விளக்குக.
ஆ) ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு அச்சு இயந்திரம் ஆற்றிய பணியினை மதிப்பிடுக.

03. அ) இலங்கையர்கோன் காலத்திலிருந்து ஈழத்து சிறுகதை வளர்ச்சியினைத் துலக்குக.
ஆ) ஈழத்து சிறுகதை வளர்ச்சியில் மறுமலர்ச்சிக் குழுவினரின் பங்களிப்பினை மதிப்பிடுக.

04. மேல் வருவோரில் யாவரேனும் இருவர் இலங்கைத்தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
1. பேராசிரியர் உவைஸ்
2. இளங்கீரன்
3. உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்
4. நல்லூர் சின்னத்தம்பி
5. ஈழத்துப் பூதந்தேவனார்
6. கூழங்கைத் தம்பிரான்.

-N.பாலா

# புவியியல் - III (மானிடப் புவியியல்) பகுதி I

## ஒரு மணித்தியாலம்

☆ பகுதி I இல் 40 பல்தேர்வு வினாக்கள் தரப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் உள்ள எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
☆ ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வழங்கப்படும்.
☆ பகுதி I இற்கான எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1) சார்க் அங்கத்துவ நாடுகளில் தலாவருமானம் கூடிய, குறைந்த நாடுகள் முறையே.
   1. மாலைதீவு, நேபாளம்
   2. இலங்கை, பூட்டான்
   3. மாலைதீவு, பூட்டான்
   4. இலங்கை, பங்களாதேஷ்

2) உலகின் தற்போதைய குடித்தொகையளவு
   1. 6 000 மில்லியன்
   2. 6 250 மில்லியன்
   3. 6 500 மில்லியன்
   4. 6 750 மில்லியன்

3) சார்க் உச்சிமாநாட்டின் முதலாவது கூட்டமும் பன்னிரண்டாவது கூட்டமும் நடைபெற்ற இடங்கள் முறையே
   1. டாக்கா, கொழும்பு
   2. டாக்கா , காட்மண்டு
   3. இஸ்லாமாபாத், கொழும்பு.
   4. டாக்கா, இஸ்லாமாபாத்

4) ஆசியாவில் 2004 ஆம் ஆண்டில் குடித்தொகை பெருக்கத்திற்கான ஊக்குவிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ள நாடு.
   1. தாய்வான்
   2. தென்கொரியா
   3. இந்தோனேசியா
   4. சிங்கப்பூர்

5) இந்தியப் படத்தில் நிழற்றப்பட்ட பிரதேசத்தில் விளையும் பிரதான பயிர்.
   1. தேயிலை
   2. நெல்
   3. கோதுமை
   4. பருத்தி



6) கலகாரிப் பிரதேசத்தில் வாழ்கின்ற ஆதிக்குடிகள்
   1. பீக்மிஸ்
   2. மாசாய்
   3. புலானி
   4. புஸ்மன்

7) இலங்கையில் குடும்பத்திட்டமிடல் சங்கம் நிறுவப்பட்டது
   1. 1960
   2. 1963
   3. 1953
   4. 1958

8) லாகோஸ் (Lagos) என்பது
   1. கென்யாவிலுள்ள மாபெரும் நகரம்
   2. நைஜீரியாவிலுள்ள மாபெரும் நகரம்
   3. நோர்வேயிள்ள மாபெரும் நகரம்
   4. தென்னாபிரிக்காவிலுள்ள மாபெரும் நகரம்

9) பவேலஸ் (Favellas) என்று அழைக்கப்படுவது
   1. கல்கத்தாவின் சேரிக்குடியிருப்பு
   2. லீமாவின் சேரிக்குடியிருப்பு
   3. றியோடியெனிரோவின் சேரிக்குடியிருப்பு
   4. எதியோப்பியாவின் சேரிக்குடியிருப்பு

10) புத்தளத்தை திருகோணமலையோடு தொடுக்கும் நெடுஞ்சாலை
   1. A 12
   2. A 10
   3. A 6
   4. A 1

11) தரப்பட்டுள்ள படத்தில் காட்டப்படும் A, B எழுத்துக்கள் குறிக்கும் யப்பானின் கைத்தொழில் நகரங்கள் முறையே.
   1. டோக்கியே, ஒசோகா
   2. யோக்கோகாமா, கோபே
   3. டோக்கியோ, நாகோயா
   4. டோக்கியோ, கோபே




12) இலங்கையில் 2002 இல் ஒரு சதுர கிலோமீற்றருக்கான குடியடர்த்தி
   1. 231 பேர்
   2. 298 பேர்
   3. 304 பேர்
   4. 310 பேர்

13) இலங்கையின் ஆடைகளை அதிகமாக இறக்குமதி செய்யும் நாடுகள்
   1. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா
   2. ஐக்கிய அமெரிக்கா, நோர்வே, பாகிஸ்தான்
   3. இந்தோனேசியா, பிரான்ஸ், ஜேர்மன்
   4. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அரபு குடியரசு

14) இலங்கையின் மானிட அபிவிருத்தி கூடிய, குறைந்த மாவட்டங்கள்
   1. களுத்துறை, கண்டி
   2. கம்பஹா, கண்டி
   3. களுத்துறை, நுவரெலியா
   4. கம்பஹா, முல்லைத்தீவு

15) உலகில் நகரம் அதிகளவு காணப்படும் நாடு எது?
   1. மலேசியா, இந்தியா
   2. ஐக்கிய அமெரிக்கா, இந்தியா
   3. மலேசியா, இந்தோனேசியா
   4. ரஷ்யா, இந்தோனேசியா

16) இந்தியாவில் துங்கபத்திரா பலநோக்குத் திட்டத்தோடு தொடர்புடைய நதி
   1. கிருஸ்ணா
   2. ஆக்ரா
   3. துங்கபத்திரா
   4. ராம்கங்கா

17) தரப்பட்ட இந்தியப் படத்தில் A, B எழுத்தக்கள் குறிக்கும் இரும்பு உருக்கு நிலையங்கள் முறையே
   1. பீகார், பத்திராவதி
   2. சேலம், யாம்செட்பூர்
   3. ரூர்கேலர், துர்க்காபூர்
   4. பீகார், ரூர்கேலர்




18) உலக சுற்றுலாதினம் கொண்டாடப்படுவது
   1. செப்ரெம்பர் 27
   2. ஒக்ரோபர் 27
   3. ஒக்ரோபர் 10
   4. மார்ச் 21

19) தரப்பட்ட பிரித்தானிய படத்தில் A.B எழுத்துக்கள் மூலம் காட்டப்படும் நகரங்கள் முறையே
   1. மன்செஸ்ரர், நியூகாசில்
   2. செபீல்ட், நியூகாசில்
   3. பேர்மிங்காம், லண்டன்
   4. பேர்மிங்காம், நியூகாசில்




20) சூப்பர் நெடுஞ்சாலைகளை 'ஓடோபிஸ்டால்' (AUTOPISTAS) எனக் கூறப்படுவது.
   1. மெக்சிக்கோவில்
   2. யப்பானில்
   3. ஜேர்மனியில்
   4. சிங்கப்பூரில்

(தொடரும்)

- V.மயூரன்

# அரபாத்மீது எவ்வித அச்சுறுத்தலையும் ஷரோன் உடனடியாக எடுக்கமாட்டார்!

## இஸ்ரேலிய துணைப்பிரதமர் தெரிவிப்பு



(டெல்அவிவ்)

பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் மீது உடனடியாக எதுவித அச்சுறுத்தலையும் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் எடுக்கமாட்டாரென இஸ்ரேல் துணைப்பிரதமர் ஒல்மெற் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் - பிரதமர் தமது அச்சுறுத்தலை யசீர் அரபாத் மீது - இன்றோ, நாளையோ ஏன் வரும் வாரத்திலோ எடுக்கமாட்டார் எனத தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் ஷரோன் தனது உரையில் - தாம் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் கருத்திற்கு கட்டுப்பட்டவரல்ல என்று கூறினார். பலஸ்தீன அதிபரின் உயிருக்கு பாதகம் விளைவிக்க வேண்டாம் என அமெரிக்கா - இஸ்ரேலைக் கேட்டிருந்தது.

உடனடியாக பலஸ்தீன தலைவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் - ஆனால், இந்த நடவடிக்கையினால் அரபாத்தின் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தூண்டியிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலிய நீதியமைச்சர் யோகி லாபிட் கருத்துத் தெரிவிக்கையில் - இதுபற்றித் தாம் இன்னுமொரு முடிவுமெடுக்கவில்லை எனவும் -

சில மாதங்களுக்கு முன்பு அரபாத்தை அகற்றும் தீர்மானத்தை அரசு எடுத்ததாயினும் இது பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவில்லை என்றும், இத் தீர்மானத்தை பாதுகாப்பு அமைச்சு இன்னும் ஆராயவில்லை எனவும் தெரிவித்தார். பிரதமரின் கருத்து அமெரிக்காவை நச்சரிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

இஸ்ரேல் ஜனாதிபதி மொஸ்கி கற்சாவ் அமெரிக்காவின் நேரடித் தாக்கத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் - யசிர் அரபாத்தைக் கொலைசெய்வதைத் தவிர்க்கும் அமெரிக்காவின் கோரிக்கைக்கு மதிப்பளிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# ஹொங் ஹொங்கில் தேர்தல்; 2007 இல் நடைபெறவுள்ளது



ஹொங்ஹொங் தனது அதிகாரத்துக்கான தேர்தலை 2007 ஆம் ஆண்டு நடாத்த தீர்மானித்துள்ள நிலையில் - சீன நாடாளுமன்றம் இத்தேர்தலை தன்னிச்சையாக நடத்தக்கூடாதென தெரிவித்துள்ளது.

ஹொங்ஹொங்கின் ஜனநாயக ஆதரவுவாதிகள் தாமே ஹொங் ஹொங்கின் தலைவரை தேர்தெடுக்க உரிமையுள்ளவர்கள் எனவும் இதில் சீனாவின் அனுமதி தேவையில்லை எனவும் தெரிவித்தனர்.

ஆனால், சீனாவின் சக்திவாய்ந்த சட்டவல்லுநர்கள் அடங்கிய குழுவினர் ஹொங்ஹொங்கில் அரசியல் சீர்திருத்தங்கள் தம்மால்தான் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படவேண்டியதொன்று என தெரிவித்துள்ளனர்.

ஹொங்ஹொங்கின் பிரதம நிறைவேற்று அதிகாரியான துங் சீ கெல் கருத்து தெரிவிக்கையில் - தாம் பெய்ஜிங்கின் முடிவுகளை ஆதரிப்பதாகவும் ஹொங்ஹொங் மக்களை அமைதியாக நடந்து கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

ஹொங்ஹொங்கின் ஜனநாயக ஆட்சியின் தீர்மானத்தை சீன மக்கள் தேசிய காங்கிரசே நிர்ணயிக்கின்றது. துங் சீ கெல் பெய்ஜிங்கின் முழு ஆதரவை பெற்றவர். இதனால் தான் ஹொங்ஹொங தேர்தல் வேண்டுமென கேட்கிறது.

இதுவரை ஹொங்ஹொங் மக்கள் எதுவித முடிவையும் எடுக்கவில்லை. ஆனால் யாராவது ஒரு சட்டவல்லுநரை தெரிய இருப்பதாக சொல்லப்படுகிறது.

ஹொங்ஹொங்கின் பிரதான அரசியல் யாப்பானது அது பூரண குடியரசாக வரவேண்டியது என்பதாகும்.

ஆனால் இதற்கான அடைவு காலம் என்பது தெளிவானதாக இல்லை. ஒரு நாடு இரு ஆட்சி என்ற உறுதிமொழியுடன் தான் 1997 ஆம் ஆண்டில் ஹொங்ஹொங - சீனாவுக்கு பிரிட்டனால் கையளிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

# பலூஜாவில் நடத்த திட்டமிட்ட தாக்குதலை அமெரிக்க இராணுவம் பிற்போட்டது!



(பாக்தாத்)

அமெரிக்க இராணுவம் பலூஜாவில் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த போர் நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பலூஜா நகர் ஈராக்கிய போராளிகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் படையினருக்கும், ஈராக்கிய சமரப் பேச்சாளர்களுக்கும் மத்தியில் அண்மையில் இணக்கம் காணப்பட்டிருந்தது. இதன்மூலம் ஈராக்கிய பாதுகாப்புப் படையினருடன் அமெரிக்கப் படையினர் ஒன்றிணைந்து ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் கலந்தாலோசித்த பின்னரே இம்முடிவினை அமெரிக்க இராணுவம் மேற்கொண்டுள்ளது.

ஈராக்கிய மக்களுக்கும், அமெரிக்கப் படையினருக்கும் இடையே பகையுணர்வு அதிகரிக்காது கவனித்துக்கொள்ளவேண்டுமென ஈராக்கிற்கான ஐக்கிய நாடுகளின் சிறப்புப் தூதுவர் தெரிவித்தார்.

தாங்கிகளை அனுப்பி பிரதேசங்களை ஆக்கிரமிப்பது தீர்வாகாது என சிறப்புப் தூதுவர் லக்டர் பிரமி தெரிவித்தார்.

ஒரு மாதத்திற்கு முன்னர் அமெரிக்கா இக்கருத்தில் அதிக கவனம் செலுத்தியிருக்காது எனவும், ஆட்சியதிகாரத்தை அமைதியாக கையளிக்க வேண்டிய நிலையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஈராக்கிற்கான சிறப்புத் தூதுவரின் கருத்தில் கவனம் செலுத்துவதாக பி.பி.ஸியின் யஸ்ரின் வெப தெரிவித்தார்.

இதனிடையே அமெரிக்கப் படையினர் பலூஜா நகரைச் சுற்றிவளைத்த வேளையிலும் முக்ரடா சதாரின் ஆதரவாளர்கள் அதிகளாவன ஆயுதங்களைச் சேகரித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், முழுமையான போர் முயற்சியின் விளைவுகளை அமெரிக்க அதிபர் உணர்ந்துள்ளதாக பி.பி.சியின் செய்தியாளர் தெரிவித்தார்.

இருநாட்டுப் படைகளும் ஒன்றிணைந்து ரோந்துப் பணிகளில் ஈடுபடும் வேளையில் வெற்றிகள் இல்லாது இழப்புக்கள் அதிகரிக்கப்படலாம் எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேற்றுமுன்தினம் சென்ற

# பிரான்ஸ் வலதுசாரித் தலைவருக்கு பிரிட்டனில் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பு

(லண்டன்)

பிரான்சின் தீவிர வலதுசாரித் தலைவர் ஜீன் மாரி லீ பென் பிரித்தானியாவுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

பிரித்தானிய தேசிய கட்சிக்கு ஆதரவு தெரிவித்து இவர் பேசியபோது மக்கள் கற்களாலும், முட்டைகளாலும அவரது காரைநோக்கி எறிந்தனர். நூற்றுக்கு மேற்பட்ட எதிர்ப்பாளர்கள் எதோட்சியதிகாரி எனக் கூக்குரலிட்டனர்.

பின்னர் அக் கட்சியின் நிதி சேகரிப்பு இராப்போசன விருந்தில் பங்குகொண்டபோது - இங்கிலாந்தில் தன்னால் ஏன் சுதந்திரமாக நடமாட முடியவில்லை எனத் தெரியவில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

இவரை இராப்போசன விருந்திலிருந்து வெளியேற்றுவதற்கு பொலிஸாரின் துணை தேவைப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒருவர் குறிப்பிடும் போது பிரான்சில் சமூகங்களிடையே பிளவினை உருவாக்குவதில் அதிகளவில் இவர் செயற்பட்டுள்ளார் என தெரிவித்தார்.

பிரித்தானிய மக்களிடையே இவ்வாறான உணர்வுகள் வெளிப்பட்டிருந்தது ஆச்சரியத்தை கொடுத்துள்ளதாக லீ பென் தெரிவித்தார்.



ஈராக், துருக்கி, மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் தான் சுதந்திரமாக நடமாடியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

லீ பென் தனது கருத்தினைத் தெரிவிக்கும்போது, பிரித்தானிய தேசியக் கட்சியும், தனது தேசிய முன்னணிக் கட்சியும், வேற்றுநாட்டவரின் குடியேற்றத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை அடையாளம் கண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை உள்நாட்டமைச்சர் டேவிட் பிலங்கெற் தனது கருத்தில் லீ பென் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரஜை எனவும் இதனால் பிரித்தானியாவில் பிரயாணம் செய்வதற்கு உரிமை உண்டெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, தொழிலாளர் ஒன்றியம் எதேட்சாதிகாரத்திற்கு எதிரான அமைப்புக்கள் லீ பென்னின் விஜயம் இனவாத உணர்வுகளைத் தூண்டிவிடக்கூடியதென தெரிவித்திருந்தது.




# வடகொரிய ரயில் விபத்தில் சிறுவர்களே அதிகம் பாதிப்பு!



வடகொரியாவில் நடந்த ரயில் விபத்தில் 1300 பேர் காயமடைந்தும், 160 பேர்வரை கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச உதவிப் பணிகளை தென்கொரியாவின் எல்லையூடாக மேற்கொள்வதற்கு வடகொரியா மறுப்புத் தெரிவித்துள்ளது. இதனால் வடகொரியாவிற்கு உதவிப் பணிகள் அந்நாட்டின் கடற்பரப்பினூடாகவே எடுத்துவரப்படுகின்றன.

ரயில் விபத்தினால் 200 மீற்றர் சுற்றளவில் உள்ள பிரதேசம் பாதிக்கப்பட்டிருந்தது.

ரயில் விபத்து நடைபெற்ற பிரதேசத்திற்கு அருகில் அமைந்திருந்த பாடசாலையொன்றும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அதிகளவிலான சிறுவர்கள் காயமடைந்திருந்தனர்.

இச்சிறுவர்கள் அனுமதிக்கப்பட்ட வைத்தியசாலைக்கு உலக உணவுத்திட்டத்தின் அதிகாரியொருவரான மைசூர் கெடெடர் பி.பி.சிக்கு தெரிவித்த கருத்தில் -

அநேகமான காயங்கள் முகத்தில் ஏற்பட்டுள்ளதாகவும், பலர் கண்களை இழந்துள்ளதாகவும் - சம்பவம் நடைபெற்ற இடத்தில் தோனறிய உயர்வெப்பக்காற்று எரிகாயங்களுக்குக் காரணமாக அமைந்ததாகவும், சிதறிப்பறந்த எரிபொருட்கள் கண்களை அதன் குழியிலிருந்து வெளியேற்றியுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## டயானாவின் மரணம் குறித்து

# பிரிட்டனின் உயர் பொலிஸ் அதிகாரி விசாரணை மேற்கொள்ளவுள்ளார்!

பிரிட்டனின் அதியுயர் பொலிஸ் அதிகாரி சேர் ஜோன்ஸ் ஸ்ரீவன்ஸ்- வேல்ஸ் இளவரசி டயானாவின் கடைசிப் பயணத்தைப்பற்றி பிரான்சில் விபரித்தார்.

சேர் ஜோன்ஸ் ஸ்ரீவனை - இராஜமாளிகையின் உறுப்பினரான மிக்கல் பேஜஸ் டயானாவின் மரணம் பற்றியும், அதற்கான காரணத்தைப்பற்றியும் ஆராயுமாறு கேட்டிருந்தார்.

சேர் ஜோன்ஸ் ஸ்ரீவன்ஸ் - டயானா தனது பயனத்தை ஆரம்பித்த றிட்ஸ் ஹோட்டலுக்கு முதலில் விஜயம்செய்து அங்கிருந்து விபத்து நடந்த இடம்வரை சென்று விபத்தைப்பற்றி ஆராய்வார் என்றும் - விபத்து நடந்த இடத்தைப் பரிசோதிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

டயானாவும், டோடியும், கார்ச்சாரதி போலும் - றிட்ஸ் ஹோட்டலிலிருந்து புறப்பட்டு மேற்படி குகையைத் தாண்டும்போதே இந்த விபத்து இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் சி.பி.எஸ். அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனம் டயானாவின் கடைசிப்பயணத்தை ஒளிபரப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. இந்த ஒளிபரப்பின் எதிரொலியாகவே மேற்படி பொலிஸ் அதிகாரியின் பிரான்ஸ் விஜயமாகும். அதுவும் அந்த ஒளிபரப்பு நடந்த மறுநாளே இவர் பிரான்ஸ் சென்றது குறிப்பிடத்தக்கது.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

### சமாதான முயற்சிகள் குறித்து ஆராய

# தூதுக்குழுவினை அனுப்புவது குறித்து இன்னமும் நோர்வே முடிவெடுக்கவில்லை!

## தூதரகப் பேச்சாளர் தகவல்

அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளராக பங்கேற்க நோர்வேக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விட்டுள்ள நிலையில் இது குறித்து பேச்சுக்களை நடத்த குழு எதனையும் இலங்கைக்கு அனுப்புவது குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என நோர்வே அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள நோர்வே தூதரக பெண் பேச்சாளர் ஜெர்ஸ்ரி ரொம்ஸ்டால் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்துக்கு தகவல் வெளியிடுகையில் -

சமாதான முயற்சிகள் தொடர்பாக பேச்சு நடத்துவதற்கு எந்தவொரு குழுவையும் கொழும்புக்கு அனுப்புவது குறித்தோ அதற்கான திகதி குறித்தோ நோர்வே இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை.

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டாளராக கடமையாற்றுமாறு ஜனாதிபதி சந்திரிகா விடுத்த அழைப்புக் குறித்து விடுதலைப் புலிகளுக்கு அறிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சமாதான முயற்சிகள் குறித்து பேச்சு நடத்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையில் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளதாக -

நோர்வே தூதரரக வட்டாரங்களை மேற்கோள்காட்டி சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் தலைமையை சந்திக்க அகாஷி கிளிநொச்சி வருகிறார்!

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளைமீள ஆரம்பிப்பது குறித்து பேச்சுக்களை நடத்துவதற்காக ஜப்பானின் விசேட சமாதான தூதுவர் யசுசி அகாஷிஇந்த வாரக் கடைசியில் இலங்கை வரவுள்ளனர்.

புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ள சூழலில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை யசுசி அகாஷி தலைமையிலான குழுவினர் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையுடன் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான விடயத்துக்கு முக்கிய கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நோர்வே தூதுக்குழுவினர் அடுத்தவாரம் வரவுள்ளனராம்

## ஜனாதிபதி செயலகம் கூறுகிறது

(கொழும்பு)

தடைப்பட்டுப் போயுள்ள விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்கும் முகமாக நோர்வே தூதுக்குழுவினர் அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகாவின் அலுவலகம் நேற்று தகவல் வெளியிட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் இது தொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது-

நோர்வே நாட்டின் தூதுக்குழுவினர் அடுத்தவாரம் இலங்கை வந்த பின்னர் தடைப்பட்டுப் போயுள்ள விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்படுமென்பதில் ஜனாதிபதி நம்பிக்கையுடன் உள்ளார்.

அத்துடன் நாம் தற்போது சட்ட விடயங்கள் மற்றும் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கான திகதிகள் தொடர்பாகக் கலந்துரையாடிவருகிறோம் எனவும் தெரிவித்தார்.

### இராணுவ முகாமூடாக...

வனுக்கு அறிவித்துள்ளோம். மேலதிகமான நடவடிக்கைகளை அவர் இன்று மேற்கொள்வார் என எதிர்பார்க்கின்றோம். அதன் பின்புதான் இதுவிடயமாகப் பேசலாம் என்றார்.

### வவுணதீவு...

வல்கள் எதுவும் தெரியாது.

இது தொடர்பான விசாரணைகளை நேற்று மதியம்தான் ஆரம்பித்தோம். இது ஒரு குற்றச்செயல். ஏனெனில் சிலரைக் கொன்றிருப்பதே இதற்குக் காரணம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.


## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு எமதுநிறுவனத்தில் வெற்றிடங்கள் இருப்பதால் தகுதியானவர்களிடமிருந்து (ஆண்கள் மட்டும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

***கணினி பக்கவடிவமைப்பாளர்கள்**

(Photo shop, corel Draw, Pagemaker என்பன தெரிந்திருத்தல் வேண்டும்)

***ஒப்புநோக்குநர்கள்**

**தகைமை:** க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்திபெற்றிருக்கவேண்டும்.
அனுபவமுள்ளவர்கள், ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

***அச்சக முகாமையாளர்**

**தகைமை:** அச்சகத்துறையில் 10 வருட அனுபவம் எதிர்பார்க்கப்படுகிறது.

**தகைமையுடையோர் இன்று அலுவலக நேரத்தில் நேரில் வந்து தொடர்புகொள்ளவும்.**

நிர்வாக இயக்குநர்.
நமது ஈழநாடு,
இல.267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


# குருநாகலில் குண்டு வெடிப்பு; தமிழ் இளைஞர் உயிரிழப்பு!

## கருணா குழுவைச் சேர்ந்தவரெனச் சந்தேகம்

(கொழும்பு)

குருநாகல் பொல்வத்தப் பிட்டிய என்ற இடத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்ற இந்தக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் சிதறிய நிலையில் காணப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலத்திற்கு அருகில் இருந்து கிளைமோர் குணடு, கிரனேட் மற்றும் பிஸ்டல் உட்பட ஆயுதங்கள் அடங்கிய வெடிபொருட்களையும், கைத்தொலைபேசி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது.

அத்துடன் மட்டக்களப்பு நாவற்குடாவைச் சேர்ந்த கே.துரைராஜசிங்கம் என்ற பெயரிலான அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்ட போதும் -

இந்த அடையாள அட்டையில் காணப்பட்டவரின் படத்துக்கும் உயிரிழந்தவரின் முகத்தோற்றத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடு இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் கிடந்த இடம், அவ்விடத்தில் கண்டெடுக்கப்பட்ட குண்டுகள் என்பனவற்றை அவதானிக்கும்போது, அரசியற்படுகொலை ஒன்றை நடத்தும் நோக்குடன் வந்தவராக இருக்கலாம் எனச் சந்தேகம் எழுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட பிரதம நீதிவான் கமுது பிரேமச்சந்திரா விசாரணைகளை நடாத்தினார்.

மரணமான நபர் தமிழ்க்குழு ஒன்றின் உறுப்பினராக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்தாலும், அபாயகரமான குண்டுகள் சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்டதாலும் - இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த இளைஞர் - கருணா குழுவின் முக்கியஸ்தராக செயற்பட்ட பிள்ளையான் என்பவரே என்று சில தகவல்கள் தெரிவித்தன.

கருணாவின் போக்குவரத்து பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த இருவர் கிழக்கில் பல்வேறு அடாவடித்தனங்களிலும் ஈடுபட்டு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கிலிருந்து கருணா வெளியேற்றப்பட்ட பின்னர் தலைமறைவாக இருந்த இவர், குருநாகலில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி இவர் பாஸ்போட் ஒன்றை விண்ணப்பித்து பெற்றிருப்பதாகவும் - இந்த பாஸ்போட் சம்பவ இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்ட கையடக்கத் தொலைபேசியில் பத்துப் பேரின் பெயர்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், இவர்களைத் தேடிக்கண்டுபிடித்து விசாரிக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை உயிரிழந்த இளைஞர் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளரான முஸ்லிம் வர்த்தகர் ஒருவரும் வேறு மூன்றுபேரும் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### மகாவலி அமைச்சு இழுபறி

# சுதந்திரக் கட்சி தலைமையுடன் ஜே.வி.பியினர் நேற்றுப் பேச்சு!

மகாவலி அபிவிருத்தி அமைச்சு தொடர்பான இழுபறி நிலை உட்பட இருதரப்புக்களுக்கும் இடையிலான பல்வேறு பிரச்சினைகள் விடயத்திலும் -

ஆகக்கூடுதலான விட்டுக் கொடுபபுடன் பிரச்சினைகளைத் தீர்க்க சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - ஜே.வி.பிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

மகாவலி அபிவிருத்தி அமைச்சு தமக்கு வழங்கப்பட வேண்டும் எனக கோரி ஜே.வி.பி தமக்கு ஒதுக்கப்பட்ட நான்கு அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்க மறுத்துவருகின்றது.

இதனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான பிரச்சினைகள் கடந்த சில நாட்களாகத் தீவிரமடைந்து வந்தன.

இத்தகைய பிரச்சினைகளைத் தீர்த்து சுமுகத் தீர்வு காண்பதற்காக நேற்று இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம் பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தப் பேச்சுக்களில் - சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் சுசில் பிறேம ஜயந்த, மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர ஆகியோர் அங்கம் வகித்தனர்.

ஜே.வி.பியின் சார்பில் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, நந்தன குணதிலக, அனுரகுமார திசநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பிலேயே ஆகக் கூடுதலான விட்டுக்கொடுப்புக்களுடன் பிரச்சினைகளைத் தீர்ப்பது என இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஜே.வி.பியின் உயர்பீட உறுப்பினர்கள் நேற்றிரவு விசேட கூட்டம் ஒன்றில் ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது.

## இரு வேறு விபத்துக்களில்...

மேலதிக மருத்துவப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை,

உடுப்பிட்டிப் பகுதியில் இடம் பெற்ற இரண்டாவது விபத்துச் சம்பவத்தில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் உயிரிழந்தார்.

உடுப்பிட்டி - வதிரி வீதியில் உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவு சங்க தலைமையகத்துக்கு முன்பாக நேற்றுக்காலை 10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

புகையிலை ஏற்றிக்கொண்டு சென்ற லான்ட் மாஸ்ரர் ஒன்றுடன் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின்புறமாக அமர்ந்து பயணம் செய்துகொண்டிருந்த நபர் படுகாயமுற்ற நிலையில் - மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டுசெல்லப்பட்ட போது இடை வழியில் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் காயமுற்றார். இச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் அடையாளம் காணப்படுவதற்காக மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து லான்ட் மாஸ்ரர் தப்பிச்சென்றுவிட்டதாகவும், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரிடம் விசாரித்தபோது - உயிரிழந்தவர் குறித்த சரியான தகவலைப் பெறமுடியவில்லை எனவும் பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர் இந்தச் சம்பவத்தை அடுத்து அதிர்ச்சியடைந்தவர் போலக் காணப்படுவதால் அவர் முன்னுக்குப் பின் முரணான வகையில் இறந்தவர் பற்றிய தகவல்களைக் கூறினார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(116,17)

## இராணுவ முகாம் ஊடாக....

யில் சிகிச்சை பெற்றுவந்த 2 ஆவது லெப்.தாரணன் ஆகியோர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தின் காரணமாக இந்த முகாமிலிருந்து 10 உழவு இயந்திரங்களும், 3 மோட்டார் சைக்கிள்களும் உழவு அடிக்கும் இயந்திரம் மற்றும் அருவி வெட்டும் இயந்திரம் என்பனவும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்ட குழுவினர், ஒரு வெள்ளை நிற வாகனம் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவல்நிலை அமைந்துள்ள முள்ளாமுனை என்ற இடத்தில் உள்ள புலிகளின் காவல்நிலை மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

கப்டன் தியானேஸ்வரன் என்றழைக்கப்படும் நடராஜா சுரேஷ் (சவுக்கடி), லெப்.தனுசன் என்றழைக்கப்படும் செல்லத்துரை யசிகரன் (மாவடிச்சேனை), 2 ஆவது லெப். செல்வவீரன் என்றழைக்கப்படும் சேதுநாத பிள்ளை பிரதீபன் (சித்தாண்டி) ஆகியோர் இந்தச் சம்பவத்தில்வீரச்சாவு அடைந்தார்கள்.

இந்தத்தாக்குதலை நடத்திய குழுவினர் வெள்ளை நிறவானில் வவுணதீவை நோக்கி தப்பிச் சென்றதாக நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. அரச படையினருடன் இணைந்து செயற்படும் தேச விரோத சக்திகளே இவ்விரு சம்பவங்களுக்கும் பொறுப்பு என மட்டு.- அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்திய குழுவினர் வவுணதீவு இராணுவ முகாம் உடாகவே வந்து பின்னர் அதன் ஊடாகவே திரும்பிச் சென்றுள்ளனர். எனவே - இந்தச் சம்பவத்திற்கும் இராணுவத்தினருக்கும் அனுசரணை இருப்பதை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது.

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதுடன், இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவத்தைச் சந்தித்து நேரடியாக கலந்துரையாடுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளேன் என கௌசல்யன் தெரிவித்தார்.

இதேவேளை - நேற்று மாலை கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு பிரதிநிதிகள் தாக்குதல் நடைபெற்ற முள்ளாமுனை, வேளாண் பண்ணை புலிகள் முகாமிற்குச் சென்று சம்பவத்தின் பாதிப்புக்களை நேரடியாகக் கண்டறிந்ததுடன் விசாரணைகளை ஆரம்பித்தார்கள்.

இச்சம்பவத்தின்போது, வீரச்சாவு அடைந்த 7 விடுதலைப் புலிகளினது வித்துடல்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு நேற்று மாலை எடுத்துச் செல்லப்பட்டன.

இன்று பிற்பகல் 4 மணிக்கு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் இவர்களது வித்துடல்கள் அடக்கம் செய்யப்படவிருப்பதாகவும், விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.